ஓம்
# இந்துசாதனம்
SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ } யாழ்ப்பாணம்:— தாதுவரு ஆனிமீ உகூ (1936 ஜூலாய் 6) திங்கட்கிழமை { இலக்கம்—உரு

# நீகஸி னுருக்கமான சொற்பெருக்கு

## சர்வதேச சங்கத்தின் நடவடிக்கைகள்

### இத்தாலிய யுத்த விமானங்கள் புரிந்த இன்னல்கள்.

"என்னுடைய பிரஜைகளுக்கு இத்தாலியர்கள் இழைத்த கொடுமைகளைப்பற்றிச் சாட்சியம் கூறும் பொருட்டே நான் இங்கு வந்தேன்."

இன்று சர்வதேசசங்கத்தின் அசெம்பிளிக் கூட்டத்தைப் பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரி திரு. ஈடன் ஆரம்பம் செய்து வைத்தார். பழைய பிரிஸிடேண்டு டாக்டர் பீனஸ் ராஜிநாமாச் செய்துவிட்டதால் திரு. ஈடன் ஆரம்பத்தில் தலைமை வகித்தார். பெல்ஜியம் பிரதம மந்திரி மான்ஷியர் வான்ஜீலந்து தலைவராகத் தேர்வுசெய்யப்பட்டார்.

### நீகஸின் உருக்கமான பேச்சு

அபிஸீனியாவின் மாஜி சக்கரவர்த்தி இன்று சர்வதேச அசம்பிளிக் கூட்டத்தில் கம்பீரமாகவும் கடுமையாகவும் பேசினார். அவருடைய பேச்சு மிகவும் உருக்கமாக இருந்தது. அவர் இத்தாலியையும் சர்வதேச சங்கத்தையும் கண்டித்தார். "சர்வதேச சங்கம் தலையிட்டு என்னுடைய ஜனங்களைக் காப்பாற்ற வேண்டும். அதன் தீர்ப்பைக் கடவுளும் சரித்திரஆசிரியர்களும் என்றென்றும் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள்" என்று நீகஸ் பேசி முடித்தார். மிகுந்த கரகோஷம் ஏற்பட்டது நீகஸ் அம்ஹாரிக் பாஷையில் பேசினார். அதேசமையத்தில் அவருடைய பேச்சு மொழி பெயர்க்கப்பட்டது.

அபிஸீனியச் சக்கரவர்த்தி சர்வதேச சங்கக் கட்டடத்திற்கு வந்ததும் அவர் உற்சாகமாக வரவேற்கப்பட்டார். அவர் மெலிவாக இருந்தும் கம்பீரமாகக் காணப்பட்டார். அசெம்பிளி பிரஸிடென்டு டாக்டர். பீனஸ் இராஜினமாச் செய்து விட்டதால், திரு. ஈடன் ஆரம்பத்தில் தலைமை வகித்தார். பின்னர் பெல்ஜியம் பிரதம மந்திரியாகிய மான்ஷியர் வான்ஜீலந்து அசெம்பிளியின் பிரஸிடெண்டாகத் தெரிவு செய்யப்பட்டார். அர்ஜென்டைன் பிரதிநிதியாகிய சிஞர்காண்டில்லோ பேசிய பின்னர் அபிஸீனியச் சக்ரவர்த்தி பேசினர்.

### நீகஸின் உருக்கமான பிரசங்கம்

நீகஸ் தம்முடைய பிரசங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

ஒரு நாட்டின் மன்னர் சர்வதேச சங்க மன்னர் அசெம்பிளிக் கூட்டத்தில் பேசுவதென்பது இது தான் முதல் தடவையாகும். மிகவும் அநாகரீகமான முறையில் யுத்தஞ் செய்து ஒரு நாட்டை மற்றொருநாடு கபளீகரம் செய்து இருப்பதை இப்பொழுதுதான் சர்வதேச சங்கம் கண்டிருக்கிறது. சர்வதேசசங்கமும் நாகரிக நாடுகளும் யுத்தத்தைத் தடை செய்திருக்கின்றன. இந்நிலைமையில் இத்தாலி காரணமின்றி அபிஸீனியாமீது போர் தொடுத்து வெற்றி கொண்டிருக்கிறது.

### நச்சுப் புகைப் பயங்கரம்

இத்தாலியயுத்த விமானங்கள் அபிஸீனியாவில் புரிந்த கொடுமைகளை என்னென்பது? அவை நச்சுப் புகையைப் பிரயோகித்து வீரர்கள் பிரஜைகள் முதலியவர்களையும் ஆடு மாடுகளையும் வதைத்து வருகின்றன மற்றும் புற்றரைகள் தண்ணீர் முதலியவற்றிற்கு விஷமூட்டப் பட்டது. இக கொடுமைகளையெல்லாம் கேரிற் கண்டு அனுபவித்த நானும் என்னுடைய கூட்டாளிகளும் சங்கத்திற்கு அறிவிப்பதுதான் பொருத்தமுடையதாக இருக்கும். என்னுடைய பிரசைகளுக்கு இத்தாலியர்கள் இழைத்துள்ள கொடுமைகளைப் பற்றிச் சாட்சியம் கூறும் பொருட்டே நான் இங்கு வந்திருக்கிறேன்.

### மக்காலே வீழ்ச்சிக்குப் பின்னர்.

ஆரம்பத்தில் மக்காலேயில் நடந்த போரில் இத்தாலியர்கள் தோல்வியுற்றனர். இதன் பின்னரேயே இத்தாலியர்கள் தடைசெய்யப் பட்டிருக்கும் பயங்கரமான போர்க்கருவிகளை உபயோகிக்கத் தீர்மானித்தார்கள் 1928ம் வருடத்தில் இத்தாலிக்கும் அபிஸீனியாவுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தப் பிரகாரம் இத்தாலி போர் புரியக் கூடாது. ஏதேனும் தகராறு ஏற்பட்டால் மத்தியஸ்தத்தின் மூலமாகத் தீர்த்து வைத்துக் கொள்ளலாம். ஆனால் இத்தாலி யுத்தத்தை நிறுத்தவேயில்லை. நேச ஒப்பந்தங்கள் யாவும் இத்தாலியின் உண்மையான நோக்கங்களை மறைப்பதாகவே இருந்தன.

எதியோப்பியர்களை ஐக்கியப்படுத்த எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் அனைத்தையும் இத்தாலியின் இயந்திரப் படைகள் பாழ்படுத்தி விட்டன சென்ற பதினூறு வருடங்களாக இத்தாலி போருக்கு ஆயத்தஞ் செய்து வந்திருக்கிறது. ஓர் ஐரோப்பியநாடு இத்தாலியின் உதவியை நாடப்போகவே போர் தொடங்குவதற்கு இத்தாலிக்கு ஓர் நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. இச் சம்பவங்களை எல்லாம் பார்க்கும்போது இத்தாலிக்கும் மற்றோர் ஐரோப்பிய நாட்டிற்குமிடையே ஓர் இரகசிய ஒப்பந்தம் ஏற்பட்டிருக்க வேண்டுமென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. சென்ற அக்டோபர் மாதத்தில் சர்வதேச சங்கத்தின் 52 நாடுகளும் சேர்ந்து இத்தாலி யுத்தத

தொடர்ச்சி 2ம் பக்கம்

---

திருவீழிமிழலை — திருவிருத்தம்.

வான் சொட்டச் சொட்டநின் றட்டும்
வளர்மதி யோடயலே
தேன்சொட்ட நின்றட்டுந்
திருக்கொன்றை சென்னி வைத்தீர்
மான்பெட்டை நோக்கி மணாளீர்
மணநீர் மிழலையுளீர்
நான்சட்ட நும்மை மறக்கினு
மென்னைக் குறிக்கொண்மினே.

—அப்பர் சுவாமிகள்

---

## இலங்கைக்குப் பாலஸ்தீன வேண்டுகோள்.

### முஸ்லீம் லீக் தீர்மானம்

பாலஸ்தீனத்தைச் சேர்ந்த இரு இஸ்லாமியப் பிரமுகர்களின் வேண்டுகோளின்படி சமீபத்தில் இலங்கை முஸ்லீம் லீக்கின் விசேஷக் கூட்டம் ஒன்று நடைபெறும். இக்கூட்டத்தில் பாலஸ்தீனத்தில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகள் சம்பந்தமாகக் கவனம் செலுத்தப்படுவதோடு பாலஸ்தீன மக்களுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் வாக்களித்த சௌகரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்காரை வற்புறுத்தும் ஓர் தீர்மானமும் கொண்டுவரப்படும்.

—

## கற்பனசக்தியில்லாத மந்திரி

### ஸர். சாமுவல் ஹோருக்கு மீண்டும் மந்திரி பதவி

"பிரதம மந்திரியார் தம்மிடத்து விசுவாசமுள்ளவரை எந்நாளும் மறக்கமாட்டார்."

ஆறு மாதங்களுக்கு முன் பொது ஜன அபிப்பிராயத்தில் தீவிரமான கிளர்ச்சி ஏற்பட்டதனுல் ஸர் சாமுவேல் ஹோர் அன்னிய நாட்டு மந்திரி பதவியை விட்டு ஓட வேண்டியதாயிற்று. அவரும் திரு. லவாலும் கூடிப் பேசிச்செய்த சமாதானத் திட்டம், அவர் ஜெனிவாவில் செய்த தீவிரமான பிரசங்கத்திற்கு முற்றிலும் மாறுபட்டது. இங்கிலாந்தின் தேசிய கவர்ன்மெண்டின் தேர்தல் வாக்குறுதிகளுக்கும் மாறுபட்டது. இந்நாட்டின் தேசியக் கௌரவத்திற்கே இது விளைவிக்கக்கூடியதென்று வைதீகக் கன்ஸர்வேடிவ் மெம்பர்கள் கூட அபிப்பிராயப்பட்டனர்.

அவருடைய பிரசித்தி பெற்றசமாதானத் திட்டத்திற்கு அவர் மட்டும் பொறுப்பாளியாக்கப்பட்டார். பிரிட்டிஷ் மந்திரி சபையின் கூட்டுப் பொறுப்புத் தத்துவத்திற்கு விநோதமான வியாக்கியானம் கூறப்பட்டது ஸர். ஸாமுவேல் ஹோர் ராஜிநாமாச் செய்தார். அவருடைய செய்கை தவறு என்று பிரதம மந்திரி திரு. பால்டுவின் கருதியதால் அவர் ராஜிநாமாச் செய்தாரா? இல்லை ஸர் ஸாமுவேலை மேலும் அன்னிய நாட்டு மந்திரி ஸ்தானத்தில் வைத்திருந்தால் அரசாங்கத்திற்கு முழுத் தோல்வி ஏற்படுமென்ற பயத்தால் ஸர். ஹோரை அவர் ராஜிநாமாச் செய்யும்படி சொன்னர்.

இப்பொழுது ஸர். ஸாமுவேல் வெகு மதிப்பளிக்கப்பட்டிருக்கிறார். கடற்படை மந்திரியாக அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஏகாதிபத்திய பாதுகாப்பிற்குக் கடற்படைக்கொள்கை முக்கியமாகவுள்ள இந் நெருக்கடியான சமயத்தில் திரு. பால்டுவின் நம்பிக்கையான தமது பழைய நண்பரொருவரை நியமித்திருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனல் இந்த நியமனத்தால் எவரும் உற்சாகம் கொள்ளவுமில்லை.

ஸர். ஸாமுவேல் ஹோரிடத்தில் சில அருமையான குணங்களுண்டென்பதில் சந்தேகமில்லை. அவருடைய நிர்வாக நேர்மையைப் பற்றிக் குறை கூறுவதற்கில்லை. அவர் சலியாமல் உழைக்கக்கூடியவர். இந்திய மசோதா விவாதத்தின்போது உண்மையான நிலைமையைக் கற்பனை செய்யும் திறமையில்லாவிடினும் சகலமான விவரங்களையும் திட்டமாக எடுத்துக் கூறும் திறமை பெற்றிருந்தார். அவர் தெளிவாகப் பேச வல்லவர். மட்டமான மந்திரிகளடங்கிய தற்கால மந்திரி சபையில் இவர் மற்றும் பலரையும் விடப் பேச்சுவன்மை அதிகமுடையவர்.

இவர் தற்சமயம் கடற்படை மந்திரியாக நியமிக்கப்பட்டிருப்பதில் பெரும்பான்மையான டோரிகள் திருப்தியடைவார்கள். சென்ற டிசம்பரில் ஸர் ஸாமுவேல் ஹோரைக் கைவிட்டது மிக அநீதமென்று பலர் எண்ணினர்கள். ஆனல் ஒரு விஷயம் திரு. பால்டுவினைப் போலப் பயந்து பதுங்கிக் கொள்ளாமல் ஸர் ஸாமுவேல் ஹோர் தான் சமாதானம் பேசியதையும் அதற்குரிய காரணங்களையும் தைரியமாகப் பாராளுமன்றத்தில் எடுத்துரைத்தார். டோரிக் கட்சியைக் காப்பாற்ற ஸர் ஸாமுவேல் ஹோர் களப்பலியாகக் கொடுக்கப்பட்டார். அவர் பதவியை விட்டு ராஜிநாமாச் செய்ய வேண்டியதாயிறது. ஸர் ஸாமுவேல் ஹோர் மனங்கலங்காமல் அந்த அவமானத்தை ஏற்றுக்கொண்டார். இந்தத் தியாகத்திற்காக அவருக்கு இப்பொழுது வெகுமதியளிக்கப்பட்டிருக்கிறது. திரு. பால்ட்வின் தம்மிடத்தில் விசுவாசமுள்ளவரை எந்நாளும் மறக்கமாட்டார். தமது பழைய சகாவுக்குப் புதிய பதவியளித்துக் கௌரவப்படுத்தியிருக்கிருர்.

ஸர் ஸாமுவேல் ஹோருக்கு நிர்வாகத் திறமையுண்டு. அவர் இந்தியா மந்திரியாக இருக்கையில் நன்றாக நிர்வாகத்தை நடத்தினர். அவருடைய உத்தியோக காலத்தில் தான் இந்தியா முழுவதும் அடக்குமுறை ஆட்சி தாண்டவமாடியது. அவருடைய இந்திய மசோதா மிகமிகக் கோழைகளான மிதவாதிகளுக்குக் கூடத் திருப்தியளிக்கவில்லை. உண்மையென்னவென்றால் ஸர் ஸாமுவேல் ஹோருக்குக் கற்பனு சக்தி கிடையாது ராஜியவாதிகளுக்குக் கற்பனு சக்தி மிக அவசியமானது. முக்கியமாகத் தற்சமயமுள்ள நெருக்கடியான நிலைமையில இந்தக் குணவிசேஷம் இன்றியமையாதது டோரிக் கட்சியைச் சேர்ந்தவர்களில் இந்த அம்சம் மிக அரிதாகவே காணப்படும். திரு. பால்ட்வினிடத்தில் ஒவ்வொரு சமயம் இது காணப்படுகிறது. திரு சர்ச்சிலுக்குக் கற்பனு

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# கந்தபுராணக் கவி நுட்பம்

## கடவுள் வாழ்த்து

### இறைவனது ஞானவடிவம் கூறியவாறு

பங்கயன் முகந்தனும்
பரமமென் றுன்னியே,
தங்களி லிருவருஞ்
சமர்செய்துற் றுழி
அங்கவர் வெருவர
அக்கியா யெழு
புங்கவன் மலரடி
போற்றி செய்குவாம்!

தாமரைப்பூவை ஆசனமாகவுடைய பிரமாவும் விஷ்ணுவும் நாமே பரப்பிரமம் என்று (தனித்தனி) நினைத்து இருவரும் ஒருவரோடொருவர் (மாறுபட்டு) யுத்தஞ் செய்த காலத்தில், அங்கே அவ்விருவரும் பயப்படும் வண்ணம் அக்கினிமலையாக (இருவர்மத்தியிலும்) சுவாலித்து நின்றருளிய தலைவராகிய பரமசிவனுடைய (அன்றலர்ந்த) தாமரைப்பூப் போன்ற திருவடிகளைத் துதித்தல் செய்வாம் என்பது பொருள்.

முகுந்தன் முத்தியைக் கொடுப்பவன்; முத்தியைத் தாம் கொடுக்க வல்லவரென்ற எண்ணத்தினுற்றன் திருமால் தம்மைப் பரம்பொருளென மதித்து இங்ஙனஞ் சமர்செய்ய முயன்றரென்பதைக் குறிப்பாகவுணர்த்தும் வண்ணம் போலும் இந்த இடத்திலே திருமாலின் நாமங்களுள் முகுந்தன் என்ற நாமம் பிரயோகிக்கப்பட்டது. பரமமென் றுன்னியே என்பதில் என்று என்னுஞ் சொல் அவர்கள் பரமல்லர் என்பதைக் குறிப்பாகக் காட்டி நிற்கின்றது. நீடித்தகாலம் நின்று இருவருஞ் சமர் செய்தனராதலின் சமர்செய்துற்றுழியென்றார். அங்கு என்பது திருவண்ணாமலையில்; பரமசிவமே சோதியாகத் தோன்றியவிடத்து. அவ்விருவரும் ஆணவமலத் தடிப்புடையராய் நின்றவராதலின் அப் பரஞ்சோதியைக் கண்டமாத்திரத்தே மகிழ்தலின்றி வெருண்டனரென்க. புங்கவன்—மேலானவன்; பரம்பொருளாயுள்ளவன். அரிபிரமர் அடிமுடி தேடிய வரலாறு இப் புராணத்திற் பின்னர்க் கூறப்படுமாதலால் இங்கு விரிக்கப்பட்டிலது. "பூமலர் மிசைவரு புனிதனுதியோர்—தாழுணர் வரியதோர் தலைமையெய்தியே......" எனப் பரமசிவத்தின் பரத்துவத்தை முதற்றிருவிருத்தத்திற் றெரித்துக் கூறிய ஆசிரியசுவாமிகள் அடுத்த திருவிருத்தத்திற் சிறிது விரித்துரைத்துள்ளார். "பிரணவத்தின் முதல் விருத்தியாகிய சிவ தத்துவம் நாதமெனப்படும். எழுத்தொலிகளுக்கு வரிவடிவங் கற்பிக்கப்பட்டமைபோல, அருவமாகிய நாதத்திற்குத் தீச்சுடர் வடிவங் கற்பிக்கப்படும். அந்த நாத வடிவமே ஈண்டுத் துதிக்கப்படுகின்றது. நாதம் ஞானமாதலால் பிரம விஷ்ணுக்களது அறியாமையைத் தீர்த்தற்குப் பொருத்தமான திருமேனி யென்பறிக" என்பது கந்தபுராண விளக்கம்.

## நீகஸி னுருக்கமான சொற்பெருக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் வெற்றி பெறுதென்று எனக்கு உறுதி கூறின. சர்வதேச சங்கம் வெற்றி பெறுமென்று நான் திட்டமாக நம்பினேன்.

### நான் துரோகியாகமாட்டேன்

இத்தாலியர்கள் ஏராளமான யுத்ததளவாடங்களின் உதவியுடன் போர் செய்தனர். ஆனால் அபிசீனியாவுக்கு ஆயுதங்கள் அனுப்ப அனுமதிக்கப் படவில்லை. சர்வதேச சங்கத்தின் 52 நாடுகளும் ஒப்பந்தப் பிரகாரம் அபிசீனியாவுக்கு உண்மையான எத்தகைய உதவியை அளித்தனவென்று கேட்கின்றேன்.

இத்தாலியர்களின் கோரிக்கைகள் எனக்குச் சாதகமாக இருந்தன. ஆனால் அவற்றை ஒப்புக் கொண்டால் நான் என்னுடைய பிரஜைகளின் துரோகியாகி விடுவேன். ஆகவே அக்கோரிக்கைகளை ஏற்க நான் மறுத்து விட்டேன. நான் சிறிய நாடுகளின் கட்சியையே எடுத்துப் பேசுகின்றேன். மூன்று ஐரோப்பிய நாடுகள் பொருளாதார நிர்ப்பந்தங்களை இத்தாலிக்கு விரோதமாக அமுலுக்குக் கொண்டுவரவில்லை. சர்வதேச சங்கத்தைப் பின்பற்றிய நாடுகளிற் சில பொருளாதார நிர்ப்பந்தங்களைக் கண்டிப்பாக அமுல் நடத்தவில்லை. நாங்கள் பண உதவி கேட்டோம். இந்த உதவியும் அளிக்கப்படவில்லை. தகுந்த ஆயுதங்களும் யுத்த விமானங்களும் இப்பொழுது அபிசீனிய விரோதிகளை எதிர்த்துப் போராட முடியாதென்பது உண்மை. அல்லது அபிசீனியாவுக்கு அயல் நாடுகளின் உதவி கிடைத்திருக்க வேண்டும். இந்த நிலைமையில் போர் செய்திருந்தால் ஓர் சிறிய ஐரோப்பிய நாட்டிற்கு ஏற்படக்கூடிய கதி அபிசீனியாவுக்கும் ஏற்பட்டிருக்கலாம். இத்தாலியின் ஆக்கிரமிப்பைத் தடை செய்யச் சரியாக முயற்சி எடுத்துக் கொள்ளப்படவில்லை.

சர்வதேசசங்கம் பொருளாதார நிர்ப்பந்தங்களை நீக்குவது அபிசீனியாவை இத்தாலியிடம் ஒப்படைத்து விடுவது போலாகும். சங்க நாடுகள் பலாத்காரம் செய்த நாட்டிற்குப் பணியப் போகின்றார்களா? அப்படிச்செய்வது ஓர் அபாயகரமான உதாரணமாகும்.

### என்னுடைய ஜனங்களைக் காப்பாற்றுங்கள்

சர்வதேச சங்க ஒப்பந்தத்தின் 16 வது ஷரத்து என்னவாயிற்று? ஜிபூதி ரெயில்வேயை நாங்கள் உபயோகிக்க அனுமதிக்கப் படவில்லை. ஆனால் இப்பொழுது இத்தாலியர்கள் அதே ரெயில்வேயை ராணுவ ஆக்கிரமிப்புக்கு உபயோகப்படுத்துகின்றார்கள். இதுதான் நடு நிலைமையா? இப் பிரச்சினையை இப்படி மாதிரி தீர்த்து வைக்க முடியாது. சர்வதேச நீதி முறைக்கே ஆபத்து இப்பொழுது தலையிட்டு மனமுடைந்திருக்கும் என்னுடைய பிரஜைகளைக் காப்பாற்றுமாறு நான் சர்வதேச சங்கத்தை வேண்டிக் கொள்ளுகின்றேன். சங்கத்தின் நியாயமான தீர்ப்பைக் கடவுளும் சரித்திர ஆசிரியர்களும் என்றென்றும் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள்"

### மௌனத்தின்பின் கரகோஷம்

ஜெனிவா, ஜூன் 30—

நீகஸின் சர்வதேசசங்கக் கூட்டத்தில் செய்த பிரசங்கம் மிக உருக்கமாக இருந்தது. இதுவரை சங்கக் கூட்டத்தில் நிகழ்த்தப் பட்ட பிரசங்கங்களில் நீகஸின் பிரசங்கமும் ஒன்றாகும். "நான் சர்வதேச சங்கத்திலிருந்து என்ன மறுமொழியை என்னுடைய ஜனங்களுக்குக் கொண்டுபோகப் போகின்றேன்?" என்று கூறி நீகஸ் பிரசங்கத்தை முடித்தார். அப்பொழுது அனைவரும் கரகோஷம் செய்தார்கள்.

கூட்டம் நாளை முற்பகல் 10-30 மணிவரை தவணை வைக்கப்பட்டது.

### இத்தாலியர் கைது

ஜெனிவா, ஜூன் 30—

இன்று சங்கக் கூட்டத்தில் நீகஸ் பேசிக் கொண்டிருந்த சமயத்தில் சிலர் கூக்குரல் போட்டுச் சத்தம் பண்ணினார்கள். ஓர் இத்தாலிப் பத்திரிகை நிருபர் உட்பட மூன்று அல்லது நான்கு பேர் கைது செய்யப்பட்டார்கள்.

ஆரம்பத்தில் ஸ்விட்ஜர்லந்து பிரதிநிதி மான்ஷியர் மோட்டா நீகஸ் பிரசங்கஞ் செய்யப் போவதை ஆக்ஷேபித்தார். நீகஸ் பேசவேண்டுமென்றதை திரு. டிவாலரா ஆதரித்தார். இறுதியாக நீகஸ் அசெம்பிளி பிரஸிடெண்டுடன் கலந்து ஆலோசனை செய்து முடிவு செய்து கொள்ளலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

### ரோமாபுரியில் சீற்றம்

ரோமாபுரி ஜூன் 30—

நீகஸ் சர்வதேச சங்கக் கூட்டத்தில் பேச அனுமதிக்கப் பட்டதால் இத்தாலியில் கெட்ட அபிப்பிராயத்தை உண்டு பண்ணி இருக்கிறது. ஐரோப்பாவுடனும் சர்வதேச சங்கத்துடனும் இத்தாலி ஒத்துழைப்பது கஷ்டமென்று கூறப்படுகிறது.

## புகைரதத்திலே போசன வசதி

கொழும்பு ஜூலை 2

இதுவரை பிரயாணிகள் வண்டியில் மேல்நாட்டு ஆகாரம் உதவப்படும் சலூன் தான் இணைக்கப்பட்டிருந்தது; கீழ்நாட்டு ஆகாரமுள்ள சலூனும் பிரயாணிவண்டியில் சேர்க்கப்படுமென்று சில தினங்களுக்குமுன் நமது பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தோம். அதன்படி நேற்று முதல் யாழ்ப்பாண விசேஷ வண்டியில் கீழ்நாட்டு ஆகார சலூன் சேர்க்கப்பட்டு ஓடுகிறது. இனி யாழ்ப்பாணப் பாதையில் ஓடும் வண்டியில் சோறு கறி முதலியவைகளைப் பிரயாணிகள் பெற்றுக் கொள்ள முடியும்.


## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பேருக்குச் செய்து கொடுத்து வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளும் கொடுத்திருக்கிறார்கள். இதை யான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, அஸாஜித், கஸ்தூரி, குமான்தாகா, பீதாணு, சாலா முஸ்லி, சப்பேமூசலி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதப்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரசபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் ருதுசுகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பல மும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்,

சிங்கப்பூரினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
வெருான் ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு

Y46 1-1-36 to 31-12-36 வரை.



## தேவை

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரசங்கத்தின் கடைக்கு வியாபாரத்தில் அனுபவப்பட்ட ஓர் மானேஜர் தேவை. பிணை ரூபா 10000-00 பதினாயிரம் பணம் அல்லது ஆதனம். வருகிற ஆடிமாசம் 20-ம் தேதிக்குமுன் காரியதரிசி அவர்களுக்கு தங்கள் அனுபவப்பத்திரங்களுடனும் சம்பளவிபரத்துடனும் மனுப்பத்திரமனுப்பவேண்டும்.

V. M. Veyagesan,
Secretary,
Jaffna Co-operative Stores Ltd.
Jaffna

Mis 68 2 - 7 to 9 - 7 - 36.


# இனிமேல் நடக்கவேண்டிய காரியம்

ஸ்ரீமான். சி. சுப்பிரமணிய பாரதியார் எழுதியது.

## "எவன் முற்றிலும் பராதீனனாகின்றானோ அவனுக்குத் தெய்வத்தன்மை யுண்டாம்"

நடந்ததெல்லாம் போக, இனிமேல் நடக்கவேண்டிய காரியத்தை நாம் யோசனை செய்யவேண்டும். கோயில் குருக்களுக்கு இனி நம்முடைய தேசத்து ஜனங்கள் ஒத்து நடக்க வேண்டுமானால் ஜனங்களிடம் பூசாரிகள் எதையும் மறைக்காமல் எந்த விஷயத்திலும் ஜனங்களை ஏமாற்றாமல் விஷயத்தைச் சொல்லவேண்டும். கடவுள் எங்கும் இருக்கிறாரே எல்லாம் கடவுள் தானே, ஊருக்குநடுவில் ஒரு கோவிலைக் கட்டி அதில் ஒரு கல்லையோ செம்பையோ நட்டு அங்கே தான எல்லோரும் வந்து கும்பிடவேண்டும் என்ற நியமம் எதற்காக என்றால் ஜனங்களுக்குள் ஐக்கியம் ஏற்படுவதற்காக. கல்லில மாத்திரம் தெய்வம் இருக்கிறதென்றும் நம்பி நம்மைச் சூழ்ந்த ஜனங்களிடம் தெய்வம் இல்லையென்று நம்பலாமா? கவனி! அண்ட பகிரண்டங்கள் எல்லாவற்றையும் உள்ளேயிருந்து ஆட்டுவிக்கும் பரஞ்சுடரே நம்மைச் சூழவும் அனந்தகோடி ஜீவராசிகளாக நின்று சலிக்கின்றது. இதுதான் வேதத்தின் கடைசியான கருத்து "தன்னிடத்தில் உலகத்தையும் உலகத்தினிடம் தன்னையும் எவன் காண்கின்றானோ! அவனே கண்ணுடையவன் என்பது முன்னோர் கொள்கை உன்னுடைய ஆத்மாவும் உலகத்தினுடைய ஆத்மாவும் ஒன்று நீ, நான், முதலை, ஆமை, ஈ, கருடன், கழுதை எல்லோரும் ஒரே உயிர். அந்த உயிரே தெய்வம். ஒன்று கூடிக் கடவுளை வணங்கப் போகுமிடத்து மனிதரின மனங்கள் ஒருமைப்பட்டுத் தமக்குள் இருக்கும் ஆத்ம ஒருமையை அவர் தெரிந்து கொள்ள இடமுண்டாகுமென்று கருதி முன்னோர்கள் கோயில் வகுத்தார்கள். ஊரொற்றுமை] கோலால் நிறைவேறும். வீட்டுக்குள் தனிபாகச் சிலை வைத்துக் கும்பிடுவது குடும்ப ஒருமை உண்டாகும் பொருட்டாக.

கவனி. நல்ல பச்சைத், தமிழில் சொல்கிறேன். ஆணாகிய நீ கும்பிடுகிற தெய்வங்களில் பெண்தெய்வமெல்லாம் உனது தாய், மனைவி சகோதரி, மகள் முதலிய பெண்களின் இடத்தே வெளிப்படாமல் இதுவரை மறைந்து நிற்கும் பராசக்தி மகிமையைக் குறிப்பிடுகின்றன. அம்மன் தாய், அவளைப் போலவே நம்முடைய பெண்கள் மனைவி சகோதரி மாதா முதலியோர் ஒளி வீசநாம் பார்க்கவேண்டும் என்பது குறிப்பு. ஆண் தெய்வமெல்லாம் நீ, உன் பிதா, உன் சகோதரர், உன் மகன், உன்னைச் சேர்ந்த ஆண் மக்கள் அடையவேண்டிய நிலைமையைக் குறிப்பிடுகின்றன. சிவன் நீ, சக்தி உன் மனைவி; விஷ்ணு நீ, லக்ஷ்மி உன் மனைவி; பிரம்மா நீ, சரஸ்வதி உன் மனைவி; இதைக்காட்டி மிருக நிலையிலிருந்த மனிதனைத் தேவநிலையில் கொண்டு சேர்க்கும் பொருட்டாக ஏற்பட்ட தேவப் பள்ளிக்கூடங்களே கோயில்களாம் இதைப் பூசாரிகளே மறைக்கிறார்கள் கும்பிடுவோர் நித்திய அடிமைகளாகவும், தெய்வாம்சம் உடையோர் தாமாகவும் இருந்தால் நல்லதென்று பூசாரி யோசனை பண்ணுகிறான். பிறரை அடிமை நிலையிலவைக்க விரும்புவோரிடம் தெய்வாம்சம் ஏற்படாது. அப்படியிருக்கப் பல பூசாரிகள் தம்மிடம் தெய்வாம்சம் இருப்பதுபோல நடித்து ஜனங்களை வஞ்சனைசெய்து பணம் பிடுங்குகிறார்கள். கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள் எத்தனை நாள் ஒரு மோசக்கார மனிதனை மூடிவைத்து அவனிடம் தெய்வம் காட்டமுடியும்? ஆகையால் இந்தப் பூசாரிகளுடைய சாயம் சீக்கிரம் வெளுத்துப்போகிறது ஜனங்கள் பூசாரிகளை அவமதிப்பாக நடத்திப் பழைய மாமூலை உத்தேசித்துக் கல்லை மாத்திரம் கும்பிடுகிறார்கள் அப்படிப்பட்ட கல் வரம் கொடுக்கவே கொடுக்காது எப்படிச் சாதாரணமாக ஒரு கல்லில் நல்ல சாதகன் பக்தியுடன் மந்திரம் ஜபித்துக் கும்பிட்ட மாத்திரத்தில் பகவான் நேரே வந்து சித்தனாம் பண்ணுவாரோ அதுபோல் யோக்கியதை யில்லாத பூசாரி தொட்ட மாத்திரத்தில பகவான் அந்தக்கல்லை விட்டுப் போய்விடுவார். அது மறுபடியும் சாதாரண ரஸ்தா உருளை ஸ்தானத்திற்கு வந்து சேர்ந்துவிடும். கோயிலுக்குப் போனாலும் சரி, போகவிட்டாலுஞ் சரி, தெய்வத்தைக் கும்பிட்டாலுஞ் சரி. கும்பிடாவிட்டாலுஞ் சரி. பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினால் தெய்வம் அருள் செய்யும். தனிகூட, ஒருவனுக்கூட மற்றவர்களை ஏமாற்றுவதே கிடையாதென்று ஒருவன் நிரூபண சித்தியடைவானாகில் அவனே ஈஸ்வரன். குருவி, காக்கை, புழு, எறும்பு ஒரு ஜந்துவுக்கும் வஞ்சனை பண்ணக்கூடாது. வஞ்சனையில்லாமல்லதோ பிறந்தோம செய்வம் உலகத்தில் விட்டதே வழியென்று ஆற்றின்மீது மிதந்துசெல்லும் கட்டைபோல் உலகவெள்ளத்தில் மிதந்து செல்லவேண்டும். அங்ஙனம் முற்றிலும் பராதீனனாகஎவன் ஈஸ்வரன்மீது சகல பாரத்தையும் போட்டுவிட்டு நடக்கிறானோ அவனுக்குத் தெய்வத்தன்மை உண்டாகும் இதில் சந்தேகமே கிடையாது.

## புருஷன் கண்ணில் மிளகாய்ப்பொடி

### மனைவி தூக்கிச்செல்லப்பட்ட வரலாறு

அகிசாவலை 28 உ

கண்ணதோட்டா எஸ்டேட்டில் வேலைபார்க்கும் டி. எல். ஏ. நிசநாயகா என்பவர் தனது வீட்டில் இரவில் சிலர் புகுந்ததாகவும் தன்னைக் கட்டி வைத்து விட்டுத் தனது மனைவியைத் தூக்கிக் கொண்டு போனதாகவும் பொலிசாரிடம் மனுச்செய்தது சம்பந்தமாக திரு எஸ். எம். வாசப்புவும் கண்டக்டரும் மற்றும் சில காவலாளிகளும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இது சம்பந்தமாகப் காப்ரியல் ஹெட்கோமி கிஜபசிரியர்த்தன, தாமஸ்சிங்கோ, ஜி. மார்டின், பி. ஏ. டேவிட்சிங்கோ, முருகன், புஞ்சி அப்புஹாமி, சந்தானம் என்பவர்கள் மீதும் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது.

நிசநாயக தனது சாக்ஷியத்தில் கதவு தட்டப்பட்டவுடன தாம் கதவைத் திறந்ததாகவுமுடனே தனது கண்ணில் மிளகாய்ப்பொடி தூவப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

அவரது மனைவி வெளியே தூக்கிக் கொண்டு போகப்பட்டதாகவும் கூறப்பட்டது.

நேற்று எதிரிகள் போலிஸ்கோட்டில் ஆஜராகி இருந்தனர்.

ஓர் சிப்பந்தி மனுச் செய்ததற்காக எஸ்டேட் செந்தக் காரரைப் பாதுகாவலில் வைக்கக் கேட்பது சரியில்லை என, எதிரிகள் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் தெரிவித்தார்.

நீதிபதி திரு. தாசப்பையும் வேறொருவரையுந்தவிர மற்றெல்லோரையும் 5உ வரை பாதுகாவலில் வைக்க உத்தரவிட்டார்.

# சயிக்கிள் தவிடுபொடி ஆயிற்று

## மோட்டார் சயிக்கிள்—பஸ் விபத்து

[நமது நிருபர்]

யாழ்ப்பாணம் 3உ

நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டுக்கு முன்னால் உள்ள சந்திக் கருகாமையில் ஒரு பஸ்ஸும் மோட்டார் சயிக்கிளும் ஒன்றோடொன்று மோதுண்டன. சயிக்கிள் தவிடுபொடியாயிற்று. சயிக்கிள் சொந்தக்காரராகிய மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திரு ஏ. சிவானந்தம் என்பவர் யாழ்ப்பாணம் ரெஸ்ட் ஹவுஸ் பக்கத்திலிருந்து பொலிஸ்கோட்டுப் பக்கமாக வந்தாரென்றும் பஸ் சுண்டிக்குளிப் பக்கத்திலிருந்து பெரியகடைப் பக்கமாக வந்ததென்றும் இரண்டும் ஒன்றோடொன்று மோதுண்ணவே, பஸ் சயிக்கிள்மீது ஏறினதென்றும் அதன் பலனாகச் சயிக்கிள் தவிடுபொடியாயிற்றென்றும் தெரிகிறது. அதிர்ஷ்டவசமாக சயிக்கிளில் வந்தவர் எவ்வித அபாயமுமின்றித் தப்பிக்கொண்டார். பஸ்ஸுக்கேனும் பஸ்ஸிலிருந்தவர்களுக்கேனும் எவ்வித சேதமும் ஏற்படவில்லை. பொலிஸார் இவ்விபத்துச் சம்பந்தமாக விசாரணை செய்துவருகின்றனர்.

## பொல்லால் அடித்துக் கத்தியாற் குற்றியது

### எதிரிகளுள் ஒருத்தி பெண்

யாழ்ப்பாணம் பெரிய கோட்டில் புலோலி தெற்கில் வசிக்கும் தப்புக்கந்தசாமி என்பவனையும் தாவடி சின்னச்சிமையாம் தவ்லூர் (1) சபதி சோமசுந்தரம் (2) கணபதிப்பிள்ளை செல்லத்துரை, (3) முருகேசு கணபதிப்பிள்ளை, (4) கணபதிப்பிள்ளை பெண் செல்லம்மா ஆகிய நால்வருமாகச் சென்ற மாசி மாசம் 24-ம் திகதி 5½ மணியளவில் பொல்லால் அடித்தும் வில்லுக்கத்தியால் குற்றியும் காயப்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கு விசாரிக்கப்பட்டது.

இச்சம்பவம் நடந்ததற்குக் காரணம் 4-ம் எதிரியாகிய செல்லம்மாவின் மாடு பயிரை அழிக்கும்போது வழக்காளிகளால் பிடித்துக் கட்டப்பட்டது. அதை அறிந்த செல்லம்மா போய்த் தனது மாட்டைக் கேட்டபோது வழக்காளிகள் கொடுக்க மறுத்தனர். இதைக்கண்ட செல்லம்மா மற்றைய மூவரையும் கூட்டிக்கொண்டு மாட்டை அவிழ்த்துவரச் சென்றுளராம். இவர்களுக்கிடையே வாக்குவாதம் உண்டாயிற்று. கடைசியாக எதிரிகள் இப்படிச் செய்துவிட்டு மாட்டையும் அவிழ்த்துச் சென்றனராம்.

விசாரணையின் பின் நீதிபதி 1-ம் எதிரிக்கு ஒரு வருஷ மறியலும் 2-ம் எதிரிக்கு 6 மாதம் கன்னடத்தையும் விதித்து 3-ம் 4-ம் எதிரிகளை விடுதலை செய்தனர்.

# அத்தியடியில் கண்டகோடரி வெட்டு

## வாடகைப் பணத் தகராறு அல்லது வேறு அந்தரங்கத்துவேஷமா?

## விறகுகட்டையால் அடிக்கவுமில்லை மயிரைப் பிடிக்கவுமில்லை

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் சென்ற (2-7-36) வியாழக்கிழமை அத்தியடியில் வசிக்கும் வயிரவநாதர் ஐயாத்துரை என்பவருக்கு அவ்வூர் அம்பலவாணர் சின்னத்தம்பி என்பவர் ஓர் கண்டகோடரியால் நெற்றியில் வெட்டிக் கடுங்காயப்படுத்தியதாகப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் றஜாப் என்பவரால் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்காளியாகிய வயிரவநாதர் ஐயாத்துரை கூறியதாவது:—

எதிரியும் மனைவியும் நான் இருக்கும் வீட்டில் ஓர் பகுதியில் வசிக்கிறவர்கள். எதிரி அதில் வசிப்பதற்கு எனக்கு வாடகைப்பணமாக மாசம் 2 ரூபா தருகிறவர்.

சென்ற ஆனி மாசம் 9-ந் திகதி பிற்பகல் 9 மணியளவில் நான் எதிரியினுடைய மனைவியிடம் போய் எனக்கு வரவேண்டிய வாடகைப்பணத்தைக் கேட்டேன் அவர் என்னிடம் ஒருகாசுமில்லை இப்போது தரமுடியாதெனக் கூறினள். நான் இல்லை எனக்கு இப்போது காசு தந்தால்தான் வேணுமென்று சொன்னேன் இப்படியாக நாங்கள் இருவரும் வாக்குவாதப்பட்டுக்கொண்டு இருக்கும்போது எதிரி ஓடிவந்து ஓர் கண்டகோடரியால் எனது நெற்றியில் வெட்டிவிட்டு ஓடிவிட்டான், நான் சத்தமிட்டுக்கொண்டு தெருப் பக்கமாக ஓடினேன். கொஞ்சதூரம் ஓடி அறிவுமயங்கி நிலத்தில் விழுந்துவிட்டேன். தம்பிராசாவும் வேறு பேருமாக எனக்கு உதவிபுரிந்தனர். இதன்பின் என்ன நடந்ததென எனக்குத்தெரியாது.

குறுக்கு விசாரணையின்போது கூறியதாவது:—

எதிரி எனது வீட்டில் சென்ற ஒரு வருஷகாலமாகச் சீவிக்கிறான். ஒழுங்காக வாடகைப்பணத்தை எதிரி தந்துவந்தவர். இந்த வாடகைப் பணத்துக்குத்தான் எங்களுக்குள் வாக்குவாதம் நடந்தது நான் எதிரியின் மனைவிக்கு ஓர் விறகுகட்டையால் அடிக்கவில்லை. நான் அவளுடைய மயிரைப் பிடிக்கவுமில்லை. எதிரி பக்கத்தார் சொல்வது பொய் யென்று சொல்லுகிறேன். நான் மதுபானம் செய்வதில்லை. நான் அந்த நேரத்திலே வாக்குமூலம் கொடுக்காததுக்குக் காயத்தின் நோவே காரணம். நான் ஆஸ்பத்திரியில் 14 நாள் இருந்தேன் முருகேசுவும் நானும் பேசிக்கொள்ளுகிறதில்லை.

(1) இராசரெத்தினம் (2) தம்பிராசா முதலிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டபின் வழக்குத் தவணையிடப்பட்டது

## "எதிரி இப்பொழுது செய்த குற்றம் யாதொன்றுமில்லை"

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் ஆனைக்கோட்டை சரவணமுத்து என்பவர் மிகவும் துஷ்டத்தனமுடையவரென அவருக்கு விரோதமாக அவ்வூர் விதானையார் M. கதிரவேலுவால் ஓர் வழக்குத் தொடரப்பட்டது.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அவ்வூர் விதானையார் கதிரவேலு கூறியதாவது:-

யாழ்ப்பாணம் ஏசண்டுத் துரைக்கு அநேக பெட்டிசங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அப்பெட்டிசங்களில் ஆனைக்கோட்டைச் சந்தியில் துஷ்டத்தனம் நடக்கிறதாகவும் வழிப்போக்கர்கட்கு சிலர் இடைஞ்சலை விளைவிக்கின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது. இப்பெட்டிசங்கள் மணியகாரனுக்கு அனுப்பப் பட்டன. மணியகாரன் என்னிடம் சென்ற மூன்று வருஷ டயறிப் புத்தகங்களைக் கொண்டுவரச்சொன்னார். அல்லாமலும் யாழ்ப்பாணத்தில் பிரசுரமாகும் "இந்துசாதனப் பத்திரிகையிலும் ஆனைக்கோட்டையில் நடக்கும் துஷ்டச் செயல்களைப்பற்றிப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இவற்றை எல்லாம் கண்ட மணியகாரன் இவ்வெதிரிமீது வழக்குத் தொடரச் சொன்னார், நானும் அப்படியே செய்தேன்.

இவ்வெதிரி சென்ற 1934-ம் ஆண்டு ஐப்பசிமீ 4-ம் திகதி ஒருவருக்கு அடித்ததாக ஓர் பெட்டிச விளக்கம் நடந்தது. இதன் பிற்பாடு சின்னத்தம்பி—முருகேசுவுக்குக் கத்தியால் குத்தியதாக எதிரிமீது வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கில் எதிரி குற்றவாளியல்லவெனக் காணப்பட்டார்.

இவ்வழக்கு நடந்தபின்புதான் இவ்வெதிரி எனது டயறிப் புத்தகத்தைப் பதித்தவர். ஆனால் இந்நாட்களில் இவ்வெதிரிமீது ஓர் முறைப்பாடும் வரவில்லை,

நீதிபதி எதிரியைக் குற்றவாளியல்ல எனக்கண்டு விடுதலை செய்தார்.

## யப்பான் வியாபாரம்

கொழும்பு, ஜூலை 2உ

ஜப்பானில் வெளிநாடுகளிலிருந்து ஏராளமான மூலப்பொருள்கள் இறக்குமதியாகின்றன. இவ்விறக்குமதி சம்பந்தமாக ஜப்பான் அரசினர் இதுவரை ஒரு புதிய விதியும் ஏற்படுத்தவில்லை. இவ்வருடம் ஜூன் மாதம் 25-ந் தேதியிலிருந்து இது சம்பந்தமாக ஜப்பான் அரசினர் புதியதொரு விதியை அமுலுக்குக்கொண்டுவந்திருக்கிறார்கள். வெளிநாடுகளிலிருந்து ஜப்பானில் இறக்குமதியாகும் சாமான்களுடன் ஒரு சர்ட்டிபிகேட்டையும், அச்சரக்குகளை அனுப்புவர்கள் அனுப்ப வேண்டும். அந்த சர்ட்டிபிகேட் அந்த நாடுகளிலிருக்கும் ஜப்பானிய ஸ்தானிகர்களிடம் கிடைக்கும். பதம் செய்யாத ஆட்டுரோமம் கழிவு அல்லது பழைய ஆட்டு ரோமம், கோதுமை, கோதுமை மாவு, மாட்டிறைச்சி வெண்ணெய், புட்டிப்பால், தோல் முதலிய சரக்குகள் இறக்குமதி சம்பந்தமாக இவ்விதி கட்டுப்படுத்தும் இவைகளுக்காக அந்தந்த நாடுகளிலுள்ள ஜப்பானிய ஸ்தானிகர்கள் கொடுக்கும் சர்ட்டிபிகேட்டுகளில் குறித்த சரக்குகள் எங்கு உற்பத்தியானவை எங்கு செய்யப்பட்டவை, எங்கு வாங்கப்பட்டவை, எங்கு கப்பலேற்றப்பட்டவை என்பன போன்ற விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

இது சம்பந்தமாகக் கொழும்பிலுள்ள ஒரு கம்பெனியார் ஜப்பானுக்குப் பதனிட்ட தோல் ஏற்றுமதி செய்யும் பொருட்டு கொழும்பிலுள்ள ஜப்பானிய ஸ்தானிகரிடம் மேற்படி சர்ட்டிபிகேட் கொடுக்கும்படி இப்போது மனுச்செய்துகொண்டிருக்கிறார் இம்மனு அனுமதிக்கப்பட்டால் இங்கிருந்து ஏராளமான தோல் ஜப்பானுக்கு ஏற்றுமதியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# இத்தாலியின் இணையற்ற புனிதவேலை

## அபிஸீனியாவுக்கு நாகரீக ஸதானம்

## இத்தாலிய அரசாங்கத்தின் மகஜர்

லண்டன், ஜூன், 30

இத்தாலி சர்க்கார் அனுப்பிய மகஜர் இன்று சர்வதேசசங்க அசெம்பிளி கூட்டத்தில் படிக்கப்பட்டது. மகஜர் 16-பக்கங்களை யுடையதாக இருந்தது. மகஜரில் அடங்கிய முக்கிய விவரங்கள் வருமாறு:—

இத்தாலி சர்வதேச சங்கத்துடனும் ஐரோப்பாவுடனும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது. ஆனால் பொருளாதார நிர்ப்பந்தங்கள் நீக்கப்படவேண்டும். ஹோர்-லவால் சமாச திட்டம் இத்தாலிகாரணமாக முறியவில்லை, ஆகவே இத்தாலியைக் குற்றம் சொல்லமுடியாது. அபிஸீனியாவின் நிலைமையையும், அடிமை வியாபாரின் நிலைமையையும் இத்தாலி ஏற்கனவே சர்வதேச சங்கக் கவுன்சிலுக்கு அறிவித்துவிட்டது. எத்தியோப்பியர்கள் மனிதவர்க்கத்திற்குரிய உரிமைகளுடன் வாழ விரும்புகின்றார்கள். அவர்கள் நீகஸின் ஆட்சிக்கு விரோதமாகக் கலகம் செய்திருக்கின்றார்கள். அவர்கள் இத்தாலி வீரர்களை விடுதலை அளிப்பவர்களாகவும், நாகரீகதானம் வழங்குபவர்களாகவும், அமைதியை நிலைநிறுத்துபவர்களாகவும் வரவேற்றார்கள். அபிஸீனியர்களை நாகரீகப்படுத்தும் புனிதமான வேலையில் இத்தாலி இறங்கியிருக்கிறது. இவ்வேலையை இத்தாலி சர்வதேச சங்க ஒப்பந்தப் பிரகாரம் செய்ய முடிக்கும். இத்தாலி அபிஸீனியர்களின் நன்மைக்காகவே பாடுபடுவார்கள். அபிஸீனியர்களை ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளாமலிருப்பதற்கு இத்தாலி சர்க்கார் உறுதிகூறத் தயாராக இருக்கின்றார்கள். ஆனால் போலீஸ் படையில் மாத்திரம் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

# சர்வதேச சங்கத்தில் நீகஸ் முழக்கம்

## வல்லரசுகளுக்கு சில கேள்விகள்

## முசோலினி நோக்கம் வெளிச்சமாகிறது

ஜூன் 30-ந் தேதி சர்வதேசசங்கக் கூட்டம் நடந்தது. அதற்கு ஹெயிலி செலாசி விஜயம் செய்தார் அவர் சபைக்குள் நுழைந்ததும் அங்கத்தவர்கள் ஆரவாரம் செய்தனர்.

எதியோப்பியச் சக்ரவர்த்தி பேசத் தொடங்கியதும், ஸ்விட்ஜர்லாந்தைச் சேர்ந்த திரு. மோட்டா ஆட்சேபித்தார். டிவாலரா பேசவதை ஆதரித்தார். பின் தலைவர் அபிப்பிராயப்படி அமாரிக்கில் நீகஸ் பேசினார்.

அர்ஜெண்டினா பிரதிநிதி, இத்தாலி ஆயுத பலத்தால் எதியோப்பியாவை ஆக்ரமித்ததைக் கண்டித்தார். "இவ்வித ஆக்ரமிப்பை சங்கம் அங்கீகாரம் செய்யக்கூடாது. நீதி நியாயமான கொள்கையை சகலாது விஷயத்திலும் அனுஷ்டானத்தில் கொண்டுவராதிருந்தால் அர்ஜண்டினா சங்கத்தில் அங்கம் வகிப்பதைப்பற்றி திருப்பி யோசிக்க வேண்டியதாயிருக்கும்" என்றார்.

அதன் மேல் நீகஸ் பேசியதாவது:

"என் ஜயபத்திற்கான முறையில் இத்தாலியர் கூறிய ஆசைமொழிகளை எல்லாம் வெறுத்துத் தள்ளினேன். என் சொந்த மக்களுக்குத் துரோகம் செய்ய நான் மறுத்துவிட்டேன்.

"சர்வதேச அரசியல் நெறியோ ஆபத்தான நிலைமையிலுள்ளது. சங்கம் தலையிட்டு எனது கொடுத்துப்போன மக்களைக் காப்பாற்ற வேண்டுகிறேன.

"தெய்வமும் சரித்திரமும் நீங்கள் இப்போது செய்யும் தீர்ப்பை என்றென்றும் மறக்காது" என்று எதியோப்பிய சக்ரவர்த்தி ஹெயிலி ஸிலாஸி 30-ந் தேதி ஜினிவா அசெம்பிளிக் கூட்டத்தில் மேடையில் குறிப்பிட்டார்.

பின்பு ஹெயிலி ஸிலாஸி விஷப்புகை பயங்கர யுத்த முறையை மனமுருகும்படி விளக்கினார்.

அவர் கூறியதாவது:—

கிராமப் புறங்களிலே 9 முதல் 18 விமானங்கள் வரை நிரைசேர்ந்துவரும். மேலிருந்து விஷ குண்டுகளை நூற்றுக்கணக்காக வீசிசிப்பாய்கள், ஆண் பெண் குழந்தைகள் எல்லாரையும் அப்படியே நாசமாக்கும். குடி தண்ணீர் குளங்களிலும் வயல்களிலும் விஷம் கலந்துவிடும்.

இந்த அக்கிரமமான பயங்கர முறையை நேரில் பார்த்த என்னையும், என் இராணுவ சகாக்களையும் விட வேறு யாரும் இங்கு ஜினிவாவில் சரியாக அதைப்பற்றித் தெரிவிக்க முடியாது. என் மக்களுக்குச் செய்த பெரும் பாதகச் செயலை எடுத்துச் சொல்லவே நான் இங்கு வந்தேன்.

ரகசிய உடன்படிக்கைகள்

எதியோப்பியாவை ஒற்றுமைப்படுத்தச் செய்த முயற்சிகளை எல்லாம் இத்தாலியர் பலவித சூழ்ச்சிகளால் தடுத்துவிட்டார்கள்.

14 வருஷகாலமாக இத்தாலி யுத்த ஏற்பாடுகள் செய்து வந்திருக்கிறது. சில ஐரோப்பியதேசங்கள், இத்தாலியின் நட்பைப் பெறவேண்டிய தவசியமென எண்ணி பிராவிடில் நிலைமையே வேறு வேறு விதமாக மாறி இருக்கும். ரகசிய உடன்படிக்கைகளே உண்மையில் நிலைமையை சரியான பாதையிலிருந்து மாற்றிவிட்டன.

உலகத்திலுள்ள சில வல்லரசுகளுள்ளிட்டு, 52 தேசங்கள் ஜினிவாவிலிருந்து எனக்கு ஓர் உறுதிமொழியளித்தன. அக்கிரமமாக படையெடுப்பவரின் எண்ணம் கைகூடாதென்று அத் தேசங்கள் கொடுத்த வாக்குறுதியால், ஜினிவா சங்கம் வெற்றி பெறுமென்றே நான் நம்பிக்கை கொண்டிருந்தேன். இத்தாலி ஏராளமான ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் சேமித்து வைத்திருக்கையில் எதியோப்பியாவுக்கு ஆயுத சப்ளையை உலக தேசங்கள் தடுத்தன. 52 தேசங்கள் ஜினிவா விதிப்படி அபிஸீனியாவுக்கு அளித்த உண்மை உதவி இதுதானா? நான

தொடர்ச்சி 5ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுவூ
ஆனிமீ உகூ திங்கட்கிழமை


## கல்விச் செலவு

நமது அரசினர் இலங்கை மக்களுக்கு ஊட்டி வருங்கல்வி இக்காலத்திற்குப் பிரயோசனப் படக்கூடியதல்லவென்றும் இக் கல்வி முறையைத் திருத்திப் பயன்படக் கூடிய முறையிற் பயிற்றத் தொடங்கினாலன்றி இலங்கை மக்கள் ஈடேறுதல் முடியாதென்றும் இப்பத்திரிகை வாயிலாக ஒருமுறை இருமுறையல்ல, பலமுறை ஓலமிட்டுள்ளோம். இத்தப் பயனற்ற கல்வி முறையைத் திருத்துதற்கான துரித முயற்சி எதனையும் இற்றைவரையிற் கண்டிலேம்.

இது ஒருபுறங் கிடக்க, இக் கல்வியின் பொருட்டுச் சென்ற 1935 - ம் ஆண்டு ஏற்பட்ட செலவு 148 லட்சம் ரூபா வரையில் என்று வித்தியாதிகாரி கணக்கிட்டுத் தமது அறிக்கை பத்திரத்தில் வெளியிட்டிருக்கின்றார். இலங்கை மக்களுக்குக் கல்வி ஊட்டும் விஷயமாக நமது அரசினர் ஒரு ஆண்டுக்கு 148 லட்சம் ரூபா செலவிடுகின்றனரே யென்பதைப் பார்க்குமிடத்து, இலங்கை கல்வி விஷயத்தில் மிகவும் உந்நதமான நிலைமையில் இருக்கின்றதென இந் நாட்டினர்மகிழ்ச்சியுறவும்அந்நிய நாடுகளிலுள்ளார் பொறாமையடையவும் நேருமல்லவா? ஆனால் உண்மை அப்படியன்று; உண்மையை உற்றுநோக்குமிடத்து இவ்வளவு பெருந் தொகையான பொருளைச் செலவிட்டும் தக்க கல்வி இந்நாட்டுப் பிள்ளைகட்கு ஊட்டப்படவில்லையே என்று எவரும் அநுதாபமுறவேண்டியே நேரிடுமெனலாம். காரணமென்னை யெனின் இலங்கை வித்தியா பகுதியில் மாணவர் பொருட்டுச் செலவிடப் படும் உதவி நன்கொடைப் பணத்தைக் காட்டிலும் வித்தியா பரிபாலனஞ் செய்யும் உத்தியோகத்தர்கள் இடாம்பீகமான கட்டிடங்கள், "டிஸ்திறிக் கமிற்றிஸ்" எனப்படும் வித்தியாபகுதிப் பெரும்பிரிவு நிருவாகசபைகள் முதலிய இவர்களுக்கும் இவைகளுக்கும் வேதனமாகவும் செலவாகவும் உதவப்படும்பணம் அதிகமெனலாம். சென்ற ஆண்டில் வித்தியா நிர்வாக சபைகள் வாயிலாகச் செலவான பணம் 648539 ரூபாவாகும். இந்தத் தொகையுள் 91214 ரூபா அதாவது முழுத் தொகையிலும் நூற்றுக்குப் 14 விகிதமானபணம் வித்தியா பரிபாலன உத்தியோகத்தர் வேதனம் முதலிய செலவாகச் செலவிடப்பட்டது. இன்னும் 313443 ரூபா, அதாவது முழுத் தொகையிலும் 48 விகிதமான பணம் வித்தியாதாபனங்கள் பள்ளிக் கூட்டங்கள் முதலியவற்றின் தாவரிப்பின் பொருட்டுச் செலவு செய்யப்பட்டது முழுத் தொகையிலும் நூற்றுக்கு 38 விகிதமான தொகையாகிய 243881 ரூபா புதிய வித்தியாசாலைகள் பழைய வித்தியாசாலைக்கட்டிடங்களைப் பெருப்பித்தல் என்னுமிவைவிஷயமாகச்செலவு செய்யப்பட்டது எஞ்சியதொகைதான் பள்ளிக்கூட மாணவர்பொருட்டு உதவி நன்கொடைப்பணமாகச் செலவிடப்பட்டதாகும்நமது அரசினர் வித்தியாபகுதியிலும்வேறுசிலபரிபாலனங்களிலும் பணஞ் செலவிடும் முறை "சுண்டங்காய் காற்பணம் சுமைகூலி முக்காற்பணம்" என்ற பழமொழிக்கு இலக்கானதாகும்.

இந்த விதமாக அரசினர் கல்வி விஷயமாக 148 லட்சம் ரூபா ஆண்டோன்றுக்குச் செலவிட, தத்தம் பிள்ளைகளைப் பயிற்றும் பொருட்டு இலங்கை வாசிகள் புத்தகம் முதலிய கல்வியுபகரணச் செலவாகவும் பள்ளிக்கூட வேதனமாகவும் விடுதிச் செலவாகவும் பரீட்சைக் கட்டணமாகவும் ஆண்டு தோறும் செலவிடும் பணம் குறித்த 148 லட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட தொகையாகுமேயல்லாமற் குறைந்த தொகையாக மாட்டாது. ஆயினும் இரண்டு பகுதியான செலவுஞ் சேர்ந்து 300 லட்சம் ரூபா இலங்கையிலே இக்காலத்தில் ஆண்டு தோறும் வித்தியாவிருத்தியின் பொருட்டுச் செலவாகின்றதென வைத்துக் கொள்ளுவோம். இப்படிப்பட்ட பெருந் தொகையை ஆண்டுதோறும் செலவிட்டு இலங்கைமக்கள் பெறுங் கல்வியெனிலோ மலை வயிறுநொந்து சுண்டெலியை ஈன்ற தன்மையதாகும் இங்கே உயர்தரக்கல்வி கிடையாது. ஆங்கிலர் கைப்பட்டு 150 வருடங்கள் வரையிலாகியும் இன்னும் ஒரு சர்வகலாசங்கந் தானும் தாபிக்கப்படவில்லை. பிழைப்பிற்கு உரிய கல்வி யாதும் ஊட்டப்படக் காணேம். தொகுத்துச் சொல்லுமிடத்து இலங்கையில் ஊட்டப்படுங் கல்வியால் அடையும் பயனும் அதன் பொருட்டுச் செலவிடப்படும் பணமும் மத்தாப்பு வாணமும் அவ்வாணஞ்செய்யும்படி செலவிடும் பணமும் போல் வியர்த்தமாகவே போகின்றனவெனச்சொல்லுதல் மிகையாகாது.

## அடிஸ் அபாபா வீரர்

### பிரிட்டிஷ் மேஜருக்குப் பட்டமுயர்வு

ரக்பி, ஜூலை 3.

அடிஸ் அபாபாவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர் காரியாலயத்தைச் சேர்ந்த படைகளின் தலைவரான மேஜர் சார்ட்டர் லெப்டினன்ட் கர்னல் பதவிக்கு உயர்த்தப்பட்டிருப்பதாகஅறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்தலியர்கள் அந்நகருள் வந்துசேருதற்குள் ஜனங்கள் நகரத்திலுள்ள பொருள்களைக் கைப்பற்றி ஏழை ஜனங்களைத் துன்புறுத்திக் கஷ்டங்கள் இழைத்தபோது அதைத் தடுத்து பொதுஜனங்களுக்கு பாதுகாப்பளிப்பதற்காக மேஜர் சார்ட்டர்செய்தசேவையைப் பாராட்டியே அவருக்கு இப்போது இந்த உயர் பதவி யளிக்கப்பட்டிருக்கிறது.

## முஸோலினியைக் கொலைசெய்ய முயற்சி

லண்டன் பிபில் பத்திரிகை எழுதுவதாவது:—

அபிஸீனியா முழுவதும் ஏகக் குழப்பம். அங்குள்ள ஜனங்கள் இத்தாலி ஆட்சிக்கு அடங்கி நடக்கச் சித்தம் கொள்ளவில்லை. அவ்வப்போது கலகம் செய்து தொல்லை விளைவிக்கிறார்கள். அலைந்து திரியும் ஜாதியார் ஓயாது துன்பம் தருகிறார்கள். ஒரு பெருந் தொகையான அபிசினியர்கள் எப்படியும் முசோலினியைப் படுகொலை செய்து விடுவதென்று சத்தியம் செய்து தயாராக விருக்கின்றனர் இதுபற்றி முசோலினி தம் அபிசீனிய விஜயத்தை ஒத்தி வைத்திருக்கிறார். இத்தாலிய தளகர்த்தர்கள் அடிஸ்அபாபாவில் அமைந்த ஏற்பட்ட பிறகு முசோலினி வரலாமென்று எழுதியிருக்கிறார்களாம்.

தலைநகருக்கு வெளியே வேலை செய்யும் இத்தாலியஅற்றர்கள் அபிசினியர் 12ஆயிரம் சோல்ஜர்களைத் தயாராக வைத்து அடிஸ் அபாபாவைத் தாக்கத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களென்று செய்தி கூறியிருக்கிறார்கள்.

இதோடு வஞ்சம் பிடித்த அபிசினிய வீரர்கள் நாட்டில் எந்தவிடத்திலும் இத்தாலியரைக் கண்டாலும் கொன்றழித்து விடுவதென்று சுற்றித் திரிகிறார்கள்.

இத்தியாதி காரணங்களால் இதாலி விமானப்படை சுற்றிப் பறந்து பார்க்கிறது; ஆனால் எதுவும் சாதிக்க முடியவில்லை.

## அரிமா நோக்கு

### இருதலைக் கொள்ளியெறும்பு

பலஸ்தீனிலே அராபியர் கலகத்தை அடக்கும் விஷயத்தில் பிருத்தானியர் அநுகூலமடைவரென எண்ணுதற்கு இடமில்லையென்பது அங்கிருந்துவரும் தந்திச் சமாசாரங்களால் யூகிக்கக்கிடக்கின்றது. பலஸ்தீனின் முதலாம் பட்டினங்களில் வசிக்கும் யூதரைக் குடியெழுப்பிவிட வேண்டுமென்பதே அராபியர் பூண்ட விரதம் அப்பட்டினங்களில் வசிக்கும் சுதந்திரம் தமக்கு வேண்டுமென்பதே யூதரின் நோக்கம். இந்த இரண்டு மாறுன சாதியாருக்கு மிடையே இப்படியான நோக்கங்களையும் தாகத்தையும் ஆரம்பத்தில் உண்டாக்கிவிட்டவர் யாரென ஆராயுங்கால் எங்கள் இராச தந்திரிகளான பிருத்தானியரென்பது பெறப்படும் எப்படியெனிற் சொல்லுதும்

ஜர்மனிய மகா யுத்தம் நடந்த காலத்தில் துருக்கியருக்கு மாறாக, தமக்குத் துணையாக இவ்வராபியர் யுத்தஞ்செய்தால் இவர்களுக்குச் சுவாதீனம் உதவப்படுமென்று ஆங்கிலர்வெளியிட்டிருந்தார்கள் அப்படியே அராபியர் செய்தனர். வேறு இந்த பிருத்தானியரே பலஸ்தீன் நகரிற் குடியிருக்கும் பூரணசுதந்திரத்தை யூதருக்கு உதவுவதாயும் வாக்களித்திருந்தார்கள். ஒன்றோடொன்று முரண்படக் கூடிய இரண்டு வரங்களை பரஸ்பரம் மாறுபாடான இரு ஜாதியாருக்கு ஏககாலத்திலே கொடுப்பதனால், காலகதியில் இப்படிப்பட்ட பிணக்கும் கலகமும் நேருமேயென்பதை அக்காலத்து பிருத்தானிய இராசதந்திரிகள் அறிந்தார்களோ இல்லையோ அறிந்தும் அறிபடர் போற் செய்தார்களோ யாம் அறியேம். "தாம் தாம் முன் செய்த வினை தாமே அநுபவிப்பார்" என்ற பிரகாரம் இப்பொழுதுதான் பிருத்தானியர் தாம் முந்திச் செய்த கிருத்திரமத்தின் பலனை அநுபவிக்கின்றார்கள்! அதற்கு யார் என்னசெய்ய முடியும்.

### டிவெலரு ஒட்டகம்

அயர்லாந்தின் சர்வாதிகாரியென மதிக்கப்படும் டிவெலரு தமது நாட்டிற்குப் பூரண சுவாதீனத்தைப் பெற்று வரும் உபாயம், பெய்யும் மழையில் தன் தலை மாத்திரம் நனையாது கூடாரத்துள் ஒதுங்க வைக்க உத்தரவு கேட்டு, பின் மெல்ல மெல்லத் தன் உடம்பு முழுவதையும் புகுத்திக் கொண்டு, தனக்கு இடங் கொடுத்த அராபியனை வெளியே விட்ட ஒட்டகத்தின் கதையை ஒத்திருக்கின்றது. ஆதியில் பிருத்தானியர் ஐரிஷ் சாதியா மீதும் அவர்கள் நாட்டிலும் செலுத்தி வந்த அதிகாரம் எப்படிப்பட்டதென்பதை உலகம் அறியும்- தாம் பிறந்த நாட்டினைச் சுபாதீனமாகவேணுமென்ற விரதம் பூண்டுழைத்த டிவெலரு பிரித்தானியருடைய அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் தம் நாட்டில் இருந்து ஒன்றொன்றாகக் கழற்ற ஈற்றில் ஒரு தேசாதிபதியை மாத்திரம் பிரித்தானியர் தெரிந்து தம் நாட்டிற்கு அனுப்பலுமென்ற நிபந்தனைக்கு மாத்திரம் உடன்பட்டிருந்தார். இப்படியான தேசாதிபதி ஒருவருடைய பரிபாலனகாலம் முடிவெய்ய, பிரித்தானியர் வேறொரு தேசாதிபதியைப் புதியவராய்த் தெரிந்து அனுப்புவதற் கிடையில், டிவெலரு தமது நாட்டிற்றுனே ஒருவரைத் தேசாதிபதியாகத் தெரிந்து நியமித்துவிட்டு, அவரை "நீங்களே தேசாதிபதியாக அனுமதித்து விடவேண்டும்" என்று பிருத்தானியருக்குத் தெரிவிக்க, பிருத்தானியா தம் ஆற்றலின்மையைக் கண்டு அதற்குச் சம்மதித்தனர் டிவெலரு இப்பொழுது அவ்வளவில் நின்று விடவில்லை. குறித்த தேசாதிபதியென்ற பதவியைத் தவிர்த்துவிட்டு அந்தப் பதவிக்கு ஒரு சனப்பிரதிநிதியை டிவெலரு இப்பொழுது நியோகிப்பதாகத் தெரிவித்திருக்கிறார். டிவெலரு இப்படியாகப் பிருத்தானியரின் மூக்கினைத் தம்முடைய கையிரல் நகத்தினற் சுரண்டவும் நமது பிருத்தானிய தத்துவ ராச்சியத்தார் பொறுத்துக் கொண்டு வாளாவிருக்கிறார்களே; இந்த இரகசியமென்ன என்று பிருத்தானிய சக்கராதிபத்தியத்திற்குக் கீழ்ப்பட்ட பிரசைகள் ஆச்சரியப்படுகிறார்கள்.

# சர்வதேசசங்கக்கூட்டத்தில் தற்கொலை முயற்சி

## பத்திரிகை நிருபர் மரணம்

## எட்வர்ட் அரசருக்குக் கடிதம்

ஜினிவா, ஜூலை 3—

இன்று சர்வதேசசங்கப் பொதுச் சபைக் கூட்ட நடவடிக்கை, ஒரு பத்திரிகை நிருபர் தற்கொலை செய்துகொள்ள முயன்றதால் தடைப்பட்டது.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, ஸெகோஸ்லோவேகியப் பத்திரிகைப் போட்டோ கிருபரான ஸ்டெபான்லக்ஸ் ஒரு ரிவால்வரை எடுத்துத் தம்மைச் சுட்டுக்கொண்டார். உடனே அவர் எழுந்து இதுவே என் கடைசி 'ஷாட்' என்று கூறிவிட்டுக் கீழே சாய்ந்தார். கூட்டம் தடைப்பட்டது. லக்ஸை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றார்கள். அவர் தற்கொலை முயற்சிக்குக் காரணம் தெரியவில்லை.

சிறிது நேரம் கழித்துக் கூட்ட நடவடிக்கை ஆரம்பமாயிற்று. சர்வதேச சங்கப் பொதுச்சபை மேஜையொன்றில் எட்வர்ட் அரசர் மிஸ்டர், ஈடன், மிஸ்டர் ஆவெனல் மிஸ்டர் பிளம் ஆகியோர் பெயருக்குக் கடிதங்களை மிஸ்டர் லக்ஸ் எழுதிவைத்திருக்கிறார்.

இரவு 9 மணிக்கு லக்ஸ் இறந்துவிட்டார். ஜெர்மனியில் யூதர்களின் கஷ்டங்களை உலகோர் உணரவும், ஜெர்மன் அரசினர் போக்கைக் கண்டிக்கவும் நினைத்துத் தாம் தற்கொலை செய்து கொண்டதாக அவர் கூறியுள்ளார்.

### விவாகம்

சிவபாதசுந்தரம்—அமுதாம்பிகை.

நெடுங்காலம் நமது இந்துசாதன ஆபிசில் வேலையாக இருக்கும் காரைநகர் ஸ்ரீ. ச. சிவசிதம்பரம் அவர்களின் புத்திரன் திரு. சிவபாதசுந்தரத்துக்கும் கல்வயங்காடு ஸ்ரீ இராமசுவாமி அவர்களின் புத்திரி சௌபாக்கியவதி அமுதாம்பிகைக்கும் சென்ற 18-ந் தேதி (1 - 7 - 36) புதன்கிழமை இரவு நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் விவாகம் கிரமமாக நடைபெற்றது. தம்பதிகள் சகல ஐஸ்வரியங்களையும் பெற்று இன்புற்று இனிது நீடுழி வாழும் வண்ணம் இறைவன் திருவருள் பாலிப்பாராக.

## எனக்கு இரண்டு கண்ணுங் குருடு

### என்புருஷனுக்கு ஒரு கண் தெரியாது

### ஆண்டவனே! இந்த நாய்தான் காவல்!

மாத்தளையிலுள்ள ஒரு பிச்சைக்காரி தன்னுடைய நாய்க்கு அநுமதிச் சீட்டு எடுக்கவில்லை யென்று அவளுக்குவிரோதமாக அதிகாரிகள் வழக்குத் தொடர்ந்தார்கள் எதிரியைச் சேவகன் நீதிஸ்தலத்திற் கூப்பிட்டபோது, கோல்பிடித்தப் புருஷன் வழி நடத்த அவள் மெல்ல மெல்ல நடந்துபோனாள்.

நீதிபதி:- உனக்கு விரோதமான இக்குற்றச்சாட்டிற்கு என்னசொல்லுகிறாய்?

மனுஷி:- ஐயா! துரையே! எனக்கு இரண்டு கண்ணுந் தெரியாது; அவருக்கு ஒரு கண் தெரியாது; நானும் அவரும் இந்த நாயுமே எங்கள் வீட்டில் இருக்கிறோம். இந்த அருமையான நாய்தான் எங்களுக்குக் காவல்; இந்த நாயில்லாவிட்டால் நாங்கள் குடியிருக்க முடியாது; நாய்க்கு "லைசென்ஸ்" எடுக்க எங்களிடம் ஒரு காசும் இல்லை.

நீதிபதி:- பட்டினசங்க எல்லையுட் குடியிருந்தால் "லைசென்ஸ்" எடுக்கத்தானே வேணும்.

மனுஷி: அந்த எல்லைக்குள் நான் இருக்கவில்லை, ஐயா.

நீதிபதி:— அந்த எல்லைக்குள் இருந்தாற் கொடுக்கத்தான்வேணும்.

### தரணியின் கீழ் "தாழி கிருஷ்ணன்"

பூமியின் கீழ் புதையல் அகப்படுவதாக அவ்வப்போது கேள்விப்படுகிறோம் பணமாக அகப்பட்டால்தான் புதையல், இன்றேல் இல்லையென்பது அர்த்தமல்ல; எத்தனையோ புதினங்கள் பூமியின் கீழ் புதைந்துகிடக்கின்றன. சமீபத்தில் செங்கற்பட்டு ஜில்லாவில் தென்பட்ட புதினமாவது:— மதுராந்தகம் ஸ்ரீ கோதண்ட ராமஸ்வாமி கோயிலில் பம்பாய் தர்மிஸ்டரும் பக்தருமான சேதஜி ஒருவரால் அந்தக்கோயிலின் பல பாகங்களைப் புதுப்பிக்கும் வேலை நடந்துவருகையில், ஒரு இடத்தில் நடகால் தோண்டியபொழுது மிகத் தொன்மை கொண்ட ஒரு ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின்சிலை கையில் யல்லுடன் கண்டெடுக்கப்பட்டது. அத்துடன் ஒரு தாம்பரத்தட்டும் உத்திரிணியும் காணப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இது தவிர 15 அடி நீளமும் 12 அகலமுங் கொண்ட ஒரு மண்டபத்தின உச்சியும் தெனபட்டிருப்பதாகத் தெரிகிறது. மேலும் தோண்டும் வேலைகள் செய்தால் அதன் முழுவிவரமும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விஷயம் மதுராந்தகத்தில் அதிக ஆச்சரியத்தை உண்டுபண்ணியிருக்கிறது. மேற்படி கோயில் ஆயிரம் வருஷங்களுக்கு மேலாக இருந்துவருகிற தென்று சிலர் கூறுகின்றனர்.

### ஜன்மாந்ர சுகிர்தம் செய்த பசு

இந்த ஜன்மத்தில் அநுபவிக்கும் பலன்களுக்கு முன் ஜன்மாந்தக் கர்மம் பிணை என்று இந்துமதவிதிகள் கூறுவதைப் பலரும் அறிவர். அதற்கிணங்க பகுத்தறிவற்ற மிருகஜாதிகளும் அந்த விதிகளை அநுஸரிப்பதாகின்றனவென்றால், இதை அதிசயம் என்னுது வேறு என்னவென்று உரைப்பது? சமீபத்தில் நடந்தேறிய சூரியக் கிரஹணத்தன்று லாகூரிலிருக்கும் பசு ஒன்று உபவாசம் இருந்தது, கிரஹணத்தின்போது அப்பசு தன்னதிரிலிருந்த புல்லையோ, தண்ணீரையோ தொடவேயில்லையாம் கிரஹணம் முடிந்தபின்னரும் அது ஒன்றும் சாப்பிடாமலிருந்ததைக் கண்ட அதன் எஜமானி, எவ்வளவோ முயன்றும் அது சாப்பிடவேயில்லையாம். புதிதாகப் புல்லும் தண்ணீரும் கொண்டுவந்து வைத்தபின், அப்பசு அவற்றை அவசரமவசரமாகத் தின்று தன் பசியைத் தணித்துக் கொண்டதாம். இந்தப் பசு பூர்வஜன்மத்தில் ஆசார அனுஷ்டானத்தை அவலம்பித்த மங்கையாயிருந்திருக்கும் போலும்!

# சாவகச்சேரியில் காதல் நாடகமா?

## கோட்டில் பெண் வாக்குமூலம்

ஜூன் 30 உ

சாவகச்சேரியைச் சேர்ந்த கைதடி நுணாவில் என்னுங்கிராமத்தில் வசித்துவரும் சின்னையா என்பவர் தமது மாமனார் குஞ்சப்பிள்ளை என்பவரோடு ஏற்பட்டுள்ள சச்சரவால் தமது மனைவி முத்துப்பிள்ளையை விட்டுப் பிரிந்திருந்ததாகவும் சுமார் 6மாதகாலமாகப் பிரிந்திருந்தபின் அவர்கள் ஒன்றுசேர விரும்பிய போதும் தந்தையாகிய குஞ்சப்பிள்ளை என்பவரே இடையூறாக விருந்ததால் காதலிருவரும் தக்கசமயம்பார்த்து தந்தை வெளியே சென்றதும் 13-ந் தேதியிரவு 10 மணியளவில் ஓர் மோட்டாரில் புறப்பட்டதாகவும் புறப்பட்ட இருவரும் 12 நாட்கள் வரையில் கொக்குவிலிலே வசித்துவந்ததாகவும் தெரிகிறது பின்னர் 27-ந் தேதி சாவகச்சேரிப் பொலிஸ் நீதிபதி அவர்கள் முன்னிலையில் முத்துப்பிள்ளை கூறியதாவது:- எனக்கு எனதுபுருஷனுடன் ஒருவிதமான திருப்தியினமும் கிடையாது எங்கள் குடும்பப்பிரிவுக்கு எனது தந்தையேகாரணம் நான் 6மாதகாலமாக எனது தந்தையின் வீட்டில் வசித்துவந்தேன் இப்போதும் அவருக்குப் பயந்தே நாங்கள் கொக்குவிலில் சிலநாள் தங்கியிருந்தோம் நான் எனது புருஷனுடன் அவரின் வீட்டிற்குப்போகப்போகிறேன் நீதிபதியின் கட்டளைப்படி இருவரும் சென்றனர்.

## மற்றொரு வித்வானும் மறைந்தார்

### பந்தநல்லூர் ரத்தினம் பிரிவு

சிறந்த தவில் வித்வான்களில் ஒருவரும், பிரபல தவில் வித்வானை நீடாமங்கலம் மீனாட்சி சுந்தரப்பிள்ளையின் பிரதம மாணவரும், காலஞ்சென்ற நாதசுர வித்வான் செம்பனார்கோயில் ராமசாமிப்பிள்ளையின் மருமகனுமான பந்தநல்லூர் திரு. ரத்தினம் பிள்ளை அதே ஊரில் தனது சொந்த வீட்டில் 22-6-36 இரவு காலமானார். அவருக்கு வயது 32 தான். அவர் கடந்த ஒரு திங்களாக பிணி வாய்ப்பட்டுக் கிடந்தார்.

அவர் மரணம் ஈடு செய்ய முடியாததாகும். நாத வித்தையில் அதிக சிறப்புப்பெற்றிருந்தபெரியார் தக்ஷிணாமூர்த்தியின் பிரிவால் விளைந்த துக்கம் தமிழர்கள் நெஞ்சை விட்டு நீங்குவதற்குள், மற்றோர் மணியான திரு. ரத்தினம்பிள்ளையு மறைந்தது ஆற்றக்கூடியதல்ல பிள்ளையின் பிரிவு சங்கீத உலகத்திறகே பெரிய நஷ்டமாகும். அவர் திறமை யறிந்த தமிழர்கள் கலங்குவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

## "நீயும் பிரமாண முண்டாக்கப் போகிறாயா?"

### வீண்கதைபேசாதே! போ வெளியே!!

அமீமன் என்னும் பொலிஸ் கொழும்புப் பட்டினசங்க நீதிஸ்தலத்தில், சென்றவாரம், முடியாண்டி யென்னும் வண்டிக்காரன் முகத்துவாரத்திலுள்ள ஒரு தெருவில் தன் வண்டியையும் மாட்டையும் ஒருவர் பாதுகாப்பில்லாமல் சும்மாவிட்டு நின்றான் என்று வழக்குத் தொடர்ந்திருந்தான். நீதிபதி பொலிசைப் பார்த்து "வண்டியையும் மாட்டையும் தனியே விட்டுவிட்டு இவ் வண்டிக்காரன் என்னசெய்தான்?" என்று கேட்டார்

பொலிஸ்: இவன், வண்டியிலுள்ள சிறகை இறக்கிக்கொண்டு நின்றான்.

நீதிபதி: அப்படியா செய்தி? நீ புதுப்பிரமாணமுண்டாக்கப்போகிறாயா? ஏ, வீண்கதை பேசாதே; கோட்டைவிட்டு வெளியேபோ" என்று அந்தப் பொலிசைக் கண்டித்தார்

## ராஜாஜி வழக்கு

### 'தமிழரசு' அவதூறு

மானநஷ்ட வழக்கு

சென்னையிலிருந்து வெளிவரும் 'தமிழரசு' ஆசிரியர் டாக்டர் மேமாசிலாமணி முதலியார் மீது திரு சி. ராஜகோபாலாச்சாரி இ. பி. கோ. 499, 500, 501, 502-வது பிரிவுப்படி பிரதமமாகாண மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் மானநஷ்டவழக்கு கொடுத்திருக்கிறார். ஆனிமாதம் வெளியான 'தமிழரசில்' திரு. ஆச்சாரியாரைத் தாக்கி ஓர் கட்டுரை பிரசுரித்திருக் கின்றதாம். அதாவது "திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்திற்கு திரு. ஜம்னலால் பஜாஜ் கொடுத்த 2½ லட்சம் ரூபாய் செலவு செய்ய திரு. ஆச்சாரியாருக்கு ஏகபோக உரிமை" என்ற வாக்கியமடங்கிய ஓர் கட்டுரை எழுதப்பட்டிருந்ததாம். இது ஆச்சாரியாரின் பரிசுத்தத்தை பிறர் சந்தேகிக்கும் முறையில் அவதூறு செய்வதாக இருக்கிறதென பிராதில ஆச்சாரியார் கூறியிருக்கிறார்.

வழக்கு இம்மாதம் 13ந் தேதியில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளபடும்.

## சண்டிருப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோவில்.

சண்டிருப்பாயில் இருக்கும் மிகப் புராதனமானதும் பாடல் பெற்ற ஸ்தலமுமாகிய கல்வளைப்பிள்ளையார் கோவிலில் உள்ள திருப்பணி வேலைகளை ஸ்ரீ க. முத்துக்குமாரு அவர்கள் நிறைவேற்றி இந்தமாசம் 16ந் திகதி (29-6-36) திங்கட்கிழமை நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் மகாகும்பாபிஷேகமும் நடத்தி வைத்தனர் அன்று தொடக்கம் வழமைபோல் திருவிழாக்களும் நடந்துவருகின்றன.

## தெல்லிப்பழையில் கத்திவெட்டு

தெல்லிப்பழையிலுள்ள காசிப்பிள்ளையார் கோயிலில் கடந்த வெள்ளிக்கிழமை (3-7-36) இரவு நடைபெற்ற ஆனி உத்தரத் திருவிழாவின்போது திருவிழாப்பார்க்க வந்த சண்டிலிப்பாயிலுள்ள ஒருவருக்கும் கொல்லங்கலட்டியிலுள்ள சிவசம்பு என்பவருக்குமிடையேயுள்ள மனஸ்தாபம் காரணமாக, சிவசம்பு என்பவர் சண்டிலிப்பாயிலுள்ள ஒருவரைக் கத்தியால் வெட்டிப் படுகாயப்படுத்திவிட்டதாகவும், சிவசம்பு என்பவர் பொலிசாருக்கு அகப்படாமல் மறைவிலிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## ஐரோப்பிய சமரசம்

### ஜெர்மன் திட்டம்

### பிரிட்டனின் சந்தேகம்

ஹிட்லர் பதில்

பேர்லின், ஜூலை 2—

ஐரோப்பிய சமரச விஷயமாக ஜெர்மனி ஒரு திட்டத்தைத் தயாரித்ததும், அதில்சில அம்சங்களைப்பற்ற பிரிட்டன் விளக்கம் கோரியதும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இப்போது ஹிட்லர் அதற்குப் பதில் தயாரித்துவிட்டார். கடிதத்தின் விவரம் வெளியிடப்படவில்லையானாலும், முக்கியமான அம்சங்களைப்பற்றி நம்பத் தகுந்த ஹேஷ்யங்கள் கிடைத்திருக்கின்றன.

(1) மேற்கு ஐரோப்பியப் பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு ஜெர்மனி தயாராகவிருக்கிறது. (2) பிறரைவலுவில் தாக்குவதில்லை யென்னும் கொள்கையை யடிப்படையாகக் கொண்டு செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் சோவியத்தையும் சேர்ப்பது கஷ்டம். (3) பிரிட்டிஷ் வெளிநாட்டு நடைமுறை ஸ்திரமாயில்லை. சர்வதேச சங்கத்தைத் திருத்தியமைக்கப் பிரிட்டன் செய்யும் யோசனையும் ஜெர்மனிக்குப் பிடிக்கவில்லை.

மிஸ்டர் டப்கூர் பாரிஸில் செய்த பிரசங்கம் ஜெர்மன் பத்திரிகைகளிடையே சஞ்சலத்தை விளைவித்திருக்கிறது பிரிட்டன் கோருவது 3 நாடுகள் ஒப்பந்தமா? பிரான்ஸ்-பிரிட்டன் ஆயுதக்கிடங்கில் ஜெர்மனியையும் இழுக்க ஏற்பாடா? என்று பிராங்கபர்ட்ஜீடங் பத்திரிகை கேட்கிறது.

லொகார்னோ மகாநாடு ஜூலை மாதக் கடைசியில் பிரசல்ஸில் நடைபெறும். அம் மகாநாட்டில் ஜெர்மனியின் பதில் ஆலோசிக்கப் பெறும்.

## குடிவெறியால் கோரச்செயல்

### பெண்டாட்டிக்கு கத்திவெட்டு

### புருஷன் தற்கொலை

தெல்லிப்பழை யென்னுமிடத்தில் கட்டாவலுப்பைச் சேர்ந்த வேலுப்பிள்ளை யென்பவர் சென்ற (2–7–36) வியாழக்கிழமை பிற்பகல் தனது மனைவியைக் கத்தியால் வெட்டித் தலையிலும் வாயிலும் கழுத்திலும் பல காயங்களுண்டாக்கியபின், தானும் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டாராம்.

நீண்ட நாட்களாக மனைவியையும் பத்துப் பிள்ளைகளையும் விட்டுப் பிரிந்திருந்த வேலுப்பிள்ளை யென்பவர் குறித்த நாளன்று குடிவெறியுடன் வந்து பிள்ளையை எடுக்கிக்கொண்டு வந்த தனது மனைவியுடன் சச்சரவிட்டுக்கொண்டதன் காரணமாகவே இக் கோர சம்பவம் நடைபெற்றிருக்கிறதாகக் கூறப்படுகிறது. காயமடைந்தபெண் குற்றுயிரான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் மறுநாள் வேலுப்பிள்ளையின் மரணவிசாரணை நடாத்தப்பட்டதாகவும் அறிகின்றோம்.

## சர்வதேச சங்கத்தில் நீகஸ் முழக்கம்

3ம் பக்கத் தொடர்ச்சி

சிறிய தேசங்களின் சார்பாகப் போராடுகிறேன்.

3 ஐரோப்பிய தேசங்கள் இத்தாலிக்கு விரோதமான தடைகளை அமுலுக்குக் கொண்டு வரவில்லை. மற்ற தேச சர்க்கார்களோ ஜினிவா சங்க கொள்கையை ஆதரிப்பதாக பறைசாற்றி வந்தாலும் அக்கொள்கைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதற்கு என்னென்ன தடைகள செய்யலாமோ அவ்வளவும் செய்தனர். நாங்கள் பண உதவிக்காகச் செய்து கொண்ட வேண்டுகோள்களை யெல்லாம் காதில் கூட போட்டுக்கொள்ளவில்லை.

இதுதான் நடு நிலைமையோ? ஜினிவா சங்க 16வது விதி என்னவாயிற்று? ஜிபூடி ரயில் பாதை மூலம் எங்களுக்கு உதவியளிக்கவில்லை.

ஆனால் அக்கிரமமாக ஆக்கிரமித்திருக்கும் இத்தாலியர்கள் அதை தாராளமாக உபயோகித்து வருகிறார்கள்? இவ்வித முறையில் இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாது.

# விஞ்ஞானிகளுக்கும் விளங்காத பூர்வ விநோதங்கள்

கடந்த அரைநூற்றுண்டுகளாக விஞ்ஞானக்கல்வியின் வளர்ச்சியால் பல துறைகளிலும் அதிக முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இக்கால நாகரிகத்தால் செருக்குக் கொண்ட மக்கள் பண்டைக்கால மக்களின் அரிய கலை இரகசியங்களை அறியவும் போற்றவும் முடியாதவர்களாக இருக்கிறார்கள் ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்னுகவே இந்தியா, எகிப்து, சீனு முதலிய தேசங்களில் வசித்துவந்த மக்கள் கலையில் அதிக வல்லமை பெற்றிருந்தனர். அவர்களால் கட்டுவிக்கப்பட்ட சில ஞாபகச் சின்னங்களின் நட்பங்களையும் மர்மங்களையும் இக்காலத்தவரால் அறிய முடியவில்லை. டில்லியிலிருக்கும் குதுப்மீனர் கோபுரத்திலிருக்கும் இரும்பு துருப்பிடிக்காமலிருக்கும் மர்மத்தை இக்கால விஞ்ஞானிகளாலும் விளக்க முடியவில்லை. எகிப்திலுள்ள பிரேத கோபுரங்களும் சீனுவின் பெரிய மதிலும் அக்கால மக்களின் கட்டிடவேலைத் திறனை விளக்காநிற்கின்றன.

### க்ஷவரக் கத்திகள்

இக்காலத்தில் நாம் உருக்கினுல் செய்யப்படும் க்ஷவரக்கத்திகளை உபயோகித்துவருகிறோம்; நாம் சிறந்த கத்திகளை உபயோகிப்பதாகவும் நினைத்துக் கொள்கிறோம். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுகவே ரோமர்கள் பித்தளை வெங்கலம் கலப்பு உலோகத்தால் செய்யப்பட்ட சிறந்த க்ஷவரக்கத்திகளை உபயோகித்து வந்தார்களென்று சரித்திரம் சாற்றும். முகத்தில் அதிகமாக மயிர் வளரவொட்டாமலும் ரணமடியில்லாமலும் க்ஷவரம் செய்து கொள்வதில் ஆதிகால ரோமர்கள் பெயர்பெற்றவர்களாவர். மேலும் அவர்கள் க்ஷவரக்கத்தி செய்வதற்கு உபயோகித்துவந்த கலப்பு உலோகத்தைக் கொண்டே வாள் ஈட்டி உளி அரம் முதலிய கருவிகளை திறம்பட செய்துவந்தனர்.

இரும்பினுல் செய்யப்படும் ஆயுதங்களை விட பித்தளை வெண்கலம் முதலிய உலோகங்களினுல் செய்யப்படும் ஆயுதங்கள் உபயோகத்தில் சிறந்தவை. இரும்பு ஆயுதங்களை உபயோகிக்கும் போது திடீரெனஅடிக்கடி அதிர்ச்சியுடன் நெருப்பும் ஒளியும் ஏற்படுவதை சாதாரணமாக காணலாம். அவ்வாறு ஏற்படுவதனுல் தொழிற்சாலை விபத்துகள் ஏற்படக் கூடும். ஆனுல் வெங்கல உலோகத்தால் செய்யப்பட்ட ஆயுதங்களை உபயோகிக்கும்போது அவ்வாறு ஆபத்துகள் ஏற்படாது. எனவே விஞ்ஞான நிபுணர் பண்டைக்கால ரோமர்களால் செய்யப்பட்டுவந்த ஆயுதங்களைப்போல் அதே உலோகத்தில ஆயுதங்கள் செய்ய முயற்சித்து வருகின்றனர்.

### சாயம்போடுதல்

இக்காலத்தில் துணிகளுக்கு பலவர்ணங்களில் சாயங்கள் போடப்படுகின்றன. உலக சரித்திரத்திலேயே சாயம் போடுவதற்கு பெயர்பெற்ற நகரம் ஸிரியாவிலிருக்கும் டையர். அந்த ஆதிகாலத்தில் செய்யப்பட்ட ஊதாச்சாயம் இக்காலத்து விஞ்ஞான நிபுணர்களாலும் செய்யமுடியாததாக இருக்கிறது. அந்த ஊதாநிறமவ்வளவு சிறப்புடையதாக விருந்தது. அவ்வாறு டையர் ஊதா சாயமிடப்பட்ட துணிகளை உயர்குலப்பிரமுகர்களும் அரசர்களுமே அணிந்துகொள்வார்களாம். அச்சாயம் மத்திய தரைக் கடலிலிருந்து பிடிக்கப்படும் "முரே" என்னும் ஓர்வகை மீன்களிலிருந்தும் எடுக்கப்பட்டுவந்ததாம். விஞ்ஞான நிபுணர்கள் இது சம்பந்தமாக பல பரீக்ஷார்த்தனைகள் செய்து பார்த்த போதிலும் அவர்களால் அத்தகைய ஊதாச்சாயம் தயாரிக்கமுடியவில்லை டையர் ஊதாச்சாயம் செய்யும் இரகசியம் பண்டைக்கால போனிஸியர்களுடன் மாய்ந்துவிட்டது.

### கண்ணாடிகள்

இக்காலத்தில் கண்ணாடிச்சாமான்கள் ஏராளமாகச் செய்யப்படுகின்றன. ஓடும் வாகனங்களிலும் தாராளமாகக் கண்ணாடிப் பாகங்கள் உபயோகிக்கப்படுகின்றன. ஆனுல் கண்ணாடியால் செய்யப்பட்ட வேலைத்திறன் மிக்க விசேஷ சாமான்கள் ஒன்றும் இப்போது உற்பத்தி செய்யப்படுவதில்லை. நான்கு அல்லது ஐந்து நூற்றுண்டுகளுக்கு முன் ஓர்வகை விசேஷமான கண்ணாடிகள் உற்பத்திசெய்யப்பட்டன. அக்கண்ணாடிகள் என்று வழங்கப்பட்டுவந்தன. அக்கண்ணாடிகளின் ஓரம் நடுப்பாகத்தினின்றும் சரிவாகத் தோன்றும் ஆனுல் கண்ணாடியின் பரப்பில் கையைத் தடவிப்பார்த்தால் அச்சரிவை உணரமுடியாது கண்ணாடியின் எல்லாப்பாகங்களும் சமனிரப்புடையதாகவே காணப்படும் அத்தகைய கண்ணாடிகளில் சிலவற்றை இப்பொழுதும் காணலாம். அக்கண்ணாடிகள் செய்யும் இரகசியமும் அக்காலத்தவருடன் மறைந்துவிட்டது. சமீபத்தில் ஓர் கண்ணாடிச் ஜர்மான உற்பத்தியாளர் மேற்கூறிய கண்ணாடியைப்போல் கண்ணாடி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் ஓர் ரசாயன சாஸ்திரியைக் கொண்டு ஆராய்ச்சி நிகழ்த்திவந்தார். அவரது ஆராய்ச்சிவெற்றிபெறவில்லை.

மேலும் அக்காலங்களில் கட்டிடங்களின் ஜன்னல் கதவுகளுக்காக செய்யப்பட்ட வர்ண கண்ணாடிகளைப்போல்கண்ணாடிகள் இக்காலத்தவரால் செய்யமுடியாது. இக்காலத்தில் இயந்திரங்களின் உதவிகளால் சரக்குகள் ஏராளமாக உற்பத்தி செய்யப்படலாம். ஆனுல் உற்பத்திசெய்யப்படும் பொருளின் நேர்த்தியைப்பற்றி கவனிக்கும்போது பண்டைக்காலத்தவரே கலைத்திறனுடையவரென்பது நன்கு விளங்கும். பண்டைக்காலத்தில் சில சாதியாரிகள் செய்துவந்த வித்தைகளை இக்காலத்திலுள்ள எந்த விஞ்ஞான நிபுணராலும் செய்யமுடியாது.

### வளையும் கண்ணாடி

கண்ணாடிகளுள் அதிக பலமான கண்ணாடிகள் இப்போது உற்பத்தி செய்யப்படுகின்றன. அவை மிக பலமாக இருப்பதுடன் உடைந்து போவதே கிடையாது. அவற்றை அதிகமாக அழுத்தினுல் அவை சிறிது வளைந்துகொடுக்கும். சமீபத்தில் பிரிட்டனில் தயார் செய்யப்பட்ட ஓர் கண்ணாடித் தகட்டின் பலத்தை பரிசீலனை செய்தார்கள். அக்கண்ணாடியிலிருந்து தொங்கவிடப்பட்டிருந்த ஓர் பலகையின்மீது மூன்று குட்டி யானைகளும் மூன்று மனிதர்களும் ஏறிநின்றனர். அவ்வாறு அப்பலகையின்மீது சுமார் ஐந்து டன் பாரம் ஏற்றப்பட்டபோதிலும் பலகை தொங்கவிடப்பட்டிருந்த கண்ணாடி உடையவில்லை. அது சிறிது வளைந்தது.

## ஜப்பானிய மந்திரி கொலை.

### எதிரிக்கு மரண தண்டனை.

டோக்கியோ, ஜூலை 3—

சென்ற வருஷம் ஆகஸ்டுமாதம் ஜப்பானில் அரசினரை எதிர்த்துக் கலகமேற்பட்டதும், ஒகாடா என்ற மந்திரி கொலையுண்டதும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இச் சமபவத்தையொட்டி லெப்டினன்ட் கர்னல் ஸாபுரோ அயிஸாவா தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தார். தண்டனை இன்று நிறைவேற்றப்பட்டது.

## மத்தியமாகாணச் சைவமகாசபை

—

கெழுச் தாது ஆண்டு ஆனித்திங்கள் 14ம் நாள் (27-6-36) சனிக்கிழமை பிற்பகல் 6மணியளவில் மேற்படி சபையின் பதினொராவதாண்டு நிறைவு விழா, கண்டி தமிழ்மண்டபத்தில் உபதலைவர் நியாயதுரந்தரர் திருவாளர் பொ. பாலசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பலவித வர்ணங்களால் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் கூட்டம் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாயது, சென்ற ஆண்டு நிகழ்ச்சியும், அறிக்கையும் வரவு செலவுக் கணக்கும் காரியதரிசி அவர்களால் வாசிக்கப்பெற்றுச் சர்வாங்கீகாரமாயின.

பின் அவைத்தலைவர் அவர்கள் சபை நோக்கத்தையும் அது ஆற்றுந் தொண்டையும் எடுத்தியம்பிய பின் கோப்பாய் அரசினர் ஆசிரியகலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் திருவாளர் வே. மகாலிங்கசிவம் அவர்களால் "காற்பர்தம்" எனும் பொருள் பற்றிக் கற்றோரும் மற்றோரும் கேட்டின்புறும் வண்ணம் இனிய செந்தமிழ் நடையின் சுவை மிக்கதோர் விரிவுரை நிகழ்த்தப்பட்டது. பின்னர் மத்திய பகுதித் தலைமைத்தமிழ் வித்தியாதரிசி பிரம்மஸ்ரீ J. T. சதாசிவஐயர் அவர்களும் திருவாளர் C. பொன்னம்பலம் B A அவர்களும் பண்டிதர் பேசிய வடிவத்தையே அவையோர் செவிமடுத்து ரசித்தருகும் வண்ணமாய்த் தழுவிப் பேசினர்.

அதன் பின் புதிய உத்தியோகத்தரடங்கிய நிர்வாகசபையினர் தெரிவு செய்யப்பெற்றனர்.

—கடித

---

## தெல்லிப்பழைக்கிராமச்சங்கத் தலைவர் தெரிவு

—

மேற்படி தெரிவு 1936 ம் ஆண்டு ஜூலைமாதம் முதலாந்தேதி புதன்கிழமை காலை 9-30 மணியளவில் தெல்லிப்பழைக் கிராமக் கோட்டில் நடைபெற்றது. அப்பொழுது மாகாணத்தலைவர் மிஸ்டர் ஈ. ரீ. டைசன் அவர்கள் தலைமை வகித்தனர். 19 வட்டாரத்திலுள்ள அங்கத்தினர் எல்லோரும் சமுகமளித்தனர்.

தலைவர் பதவிக்கு பழைய தலைவர் திருவாளர் சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை யவர்களும், மல்லாகம் ஆங்கில வித்தியாசாலை தலைமையாசிரியர், திரு. வயிரவப்பிள்ளை செல்லப்பாவும் அவர்களும் அபேட்சகர்களாக நின்றார்கள். இரகசிய சம்மதச் சீட்டுக்களை மாகாணத்தலைவர் பிரித்துப்பார்த்தளவில் திரு செல்லப்பா அவர்களுக்கு 10உம் திரு சங்கரப்பிள்ளை அவர்களுக்கு 9உம் இருந்தன. திரு செல்லப்பா அவர்களே மேற்படி சங்கத்திற்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டாரென வெளியிடப்பட்டது. திரு. செல்லப்பா அவர்கள் தலைவர்பதவியடைந்ததை மாகாணத்தலைவர் மெச்சித் துதி கூறினர். திரு செல்லப்பா அவர்கள் மாகாணத் தலைவருக்கும் அங்கத்தவர்களுக்கும் நன்றி கூறினர்.

கடித

---

## செம்பால் அடித்து வாயாற் கடித்தது

சுளிபுரத்தில் வசிக்கும் அம்பலவாணர் கந்தசாமி என்பவர் தம்முடைய சிறிய தாயார் பாறுவதிக்கும் மகள் தங்கரெத்தினத்துக்கும் செம்பால் தலையில் அடித்தும் வாயால் கையில் கடித்தும் காயப்படுத்தியதாக அறிகிறோம். காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகப் போய் இருக்கிறார்கள். கந்தசாமியைப் பொலிசார் விளக்க மறியலில் வைத்திருக்கின்றனர்.

---


## வைத்தியர், வைத்திய மாணவர், ஆண் பெண் அவ்வவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த உயரிய வைத்திய சாஸ்திரம்

## சிகிச்சாசாரம்

1500 பக்கங்கள் கொண்டது.

"ஸ்திரிபால சிகிச்சையின்" ஆசிரியர்

டாக்டர். எஸ். ஏ. சின்னப்ப ரவர்களால் இயற்றப்பட்டது.

இந்நூல் அநேக பெரும் அத்தியாயங்களாக வகுக்கப்பட்டு, தக்க தலையங்கங்களின்கீழ் மிக்க ஆராய்ச்சியுடன் மேல்நாட்டு நவீன கலை நூல்களுக் கொப்ப தொகுக்கப்பட்டது.

எப் பாஷையிலும் வெளிவராத ஒருயரிய வைத்திய கலை நூல் இது என்பதும், தமிழ்ப் பாஷையில் அநேக நூல்களிருப்பினும் இதைப்போன்ற சம்பூரண வைத்திய அறிவைப்புகட்டும் நூல் ஒன்றுமில்லை என்பதும் பல பேரறிஞர்களின் புகழுரை

## மேல்நாட்டு சுதேச வைத்திய சாஸ்திரத்தை சாங்கோபாங்கமாய் விளக்கும்

## சிகிச்சா சாரம்

ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு வைத்தியசாலையிலும் ஒவ்வொரு புத்தகசாலையிலும் அவசியம் இருந்தே தீரவேண்டும்.

இச் சிறந்த நூலை குறைந்த விலை திட்டத்தில் யாவரும் அடைய வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

☞ 15—7—36 க்குள் முன்பணமாக ரூ 3/8 அனுப்பி தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்ளுவோருக்கு புத்தகம் பயின்டாகி முடிந்தவுடன் யாதொரு செலவுமின்றி அனுப்பிவைக்கப்படும். இதற்குப் பிறகு புத்தகத்தின் கிரயம் ரூ 5/- ஆகவே விற்கப்படும். தபாற் செலவும் ரூ. 1-4-0 ஆகலாம்.

குறிப்பு:-

அநேகர் வேண்டுகோட் கிணங்கவும், யாவரும் இந் நல்லசந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ளவும்வேண்டி குறைந்தவிலை திட்டத்தின் தவணையை 15-7-36 வரை நீடிக்கச்செய்யப் பட்டது. இதர விபரங்களுக்கு:

**டாக்டர். எஸ். ஏ. சின்னப்பர்**
எட்டயாபுரம்
திருநெல்வேலி ஜில்லா, தென் இந்தியா

---

## வீ. பீ. நிக்கலஸ் அன் சன்ஸ் (வங்கி)

(1920-இல் ஸ்தாபிக்கப்பட்டது.)

2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்.

தந்தி விலாசம்: "ஜாவ்னபாங்க்"    தெலிபோன் இல. 27.

உண்டியல்:—கொழும்பு, இந்தியா, மலாயா முதலிய இடங்களுக்கு நேராகவும் உலகத்திலுள்ள ஏனைய பிரதான இடங்களுக்கு விசேஷ ஒழுங்கு செய்தும் உண்டியல் கொடுக்கப்படும்.

கடன்:—நகைகள் அடைவாகப்பெற்றுக்கொண்டு 12விகித வட்டிக்குப்பணங்கொடுக்கப்படும். தகுந்த பிணையுடன் தினசரிப் பற்றுவரவுக் கணக்கின் பேரிலுங் கடனெடுக்கலாம்.

பணமாற்று:—இந்திய சிங்கப்பூர் நாணயங்கள், கோட்டுக்கள் வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கப்பற்தண்டு:—உலகத்திலுள்ள எந்தப் பிரதான துறைமுகத்திலும்போய் இறங்கத்தக்கதாக, கமிஷனின்றி கப்பற்தண்டுகள் எடுத்துக்கொடுக்கப்படும்.

மேற் கூறப்பட்டவைகளும் இன்னுஞ் சகலவித வங்கிமுயற்சிகளும் எமது யாழ்ப்பாணநாட்டினரின் வசதிக்கேற்ற பிரகாரஞ் செய்யப்படும்.

எஸ். பி. ஜோசேப்,
மனேஜர்.

(Y. 138. 21.10-35—20-10-36.) ந

---

## யாழ்ப்பாணம் ஐக்கியலாப நிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 134,367 00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறுங் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொவ்வொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 1 விகித வட்டியுடன தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலவரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொகையாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்

நகைகளை ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
மானேஜர்.

(Y-203, 21.11.35—20-11-36) (ந.)


---

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

—

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டவிச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் திரிகோணமலை 8ம் நெம்பர் காசுக்கடைவீதி வே. த. வெற்றிவேற்பிள்ளை வே. த. சிதம்பரப்பிள்ளை வே. த. தம்பிப்பிள்ளை என்பவர்களிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிசித்த ஏலத்தில் விறகப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1934-ம் ஆண்டு 8ம் மாசம்

| எண் | தெ. | ரூ சத. | நகைகளின் விபரம் |
|---|---|---|---|
| 28 | 3 | 20 | வெ பாதசரம்சோடி 1 |
| 29 | 4 | 76 04 | அச்சக்காப்பு சோடி 2 |
| 56 | 6 | 30 | பீலிக்காப்பு 1 சு இ |
| 78 | 8 | 33 78 | சிகப் பூவுடன் ஐந்து பட்டுமணி 1 |
| 83 | 8 | 6 | சிற தங்ககாப்பு சோடி 1 பூ இ |
| 96 | 9 | 17 | பி இ தாலிதட்டுக் கோர்வை 1க்குத தட்டு 8 குடம் 1 |
| 146 | 14 | 9 | இமிற் சிற காதோலை சோடி 1 |
| 332 | 29 | 35 | செடிக்காப்பு 1 |
| 335 | 29 | 8 | இமிற்கல் சலாவளைக் குச்சு சோடி 1 |
| 342 | 30 | 10 | ஆடுத்தன் மோதிரம் 1 |
| | | | 1934ம் ஆண்டு 9ம் மாசம் |
| 429 | 7 | 7 | ஒருகல் செருநதோடு சோடி 1 |
| 433 | 7 | 6 | கைவிலங்கு 1 முதிபல் |
| 465 | 10 | 11 | சிலக்கல மோதிரம் 1 |
| 564 | 17 | 61 | பி இ தாலிக்கொடி 1 கற்தோடு சோடி 1 கம்பி சுரை இல்லை |
| 588 | 18 | 5 54 | ஒருகல் செருகுதோடு சோடி 1 |
| 658 | 23 | 7 54 | ஒருகல் செருகுதோடு 1 |
| 689 | 26 | 6 | சுடர் திருகுபூ 1 |
| 693 | 26 | 8 04 | இருதயம் 1 |
| 703 | 27 | 7 | பெண்குச்சு சோடி 1 |
| | | | 1934ம் ஆண்டு 10ம் மாசம் |
| 752 | 2 | 6 | தோடு சோடி 1 |
| 826 | 8 | 15 04 | திருகுபூ 1 |
| 828 | 9 | 13 04 | தங்ககாப்பு சோடி 1 பூ இல்லை |
| 860 | 11 | 90 04 | இமிற்பத சங்கிலிபட்டியல் 1 |
| 884 | 14 | 6 | டைமன் கொப்புச் சிமிக்கி சோடி 1 |
| 898 | 15 | 85 04 | செட்டிக்கொலிசு சோ 1 |
| 991 | 22 | 130 04 | ஒப்பின்காப்பு சோடி 1 சுரை 1ம் கல2ம் இல்லை |
| 1002 | 23 | 15 | தோடு சோடி 1 |
| | | | 1934ம் ஆண்டு 11ம் மாசம் |
| 1197 | 5 | 18 04 | கு வை தக்கப்பவுண் 1 |
| 1231 | 10 | 35 04 | பொன் சறடு 1 |
| 1297 | 14 | 17 04 | தங்கப்பவுண் 1 |
| 1328 | 16 | 75 04 | செடிக்காப்பு சோடி 1 |
| 1335 | 16 | 17 04 | பத பிறை சவுக்கமணி 1க்கு மணி 25 |
| 1360 | 17 | 15 | இமிற் காதோலை சோ 1 |
| 1377 | 19 | 13 | இமிற் காதோலை சோ 1 |
| 1490 | 29 | 9 04 | சிற மோதிரம் 1 |
| | | | 1934ம் ஆண்டு 12 ம் மாசம் |
| 1512 | 1 | 20 | வெ பாதசரம் சோடி 1 |
| 1654 | 11 | 28 | இமிற்கல் பதக்கம் 1 கல் 1 இல்லை |
| 1670 | 12 | 50 | அறுக்குத்து 19 |
| 1682 | 13 | 14 | சங்கிலித்துண்டு 1 |
| 1713 | 15 | 29 | சிற இருதயமுடன் சங்கிலி 1 கல் மோதிரம் 1 |
| 1731 | 16 | 32 04 | வெ கல் காதோலை சோடி 1உ கல் செடிப்பின் 1 இமிற்கல் சிற கவுத்தோர் 1 சிற மோதிரம் 1 |
| 1748 | 17 | 6 20 | ஒருகல் சிற செருகுதோடு சோடி 1 |
| 1782 | 19 | 8 08 | சிமிக்கி சோடி 1 |
| 1795 | 20 | 15 04 | தங்ககாப்பு சோடி 1 |
| 1823 | 22 | 7 04 | சிறமோதிரம் 1 |
| 1833 | 23 | 13 | சிற கம்பித தோடு சோடி 1 |
| 1942 | 31 | 20 | அறுக்குத்து 10 |
| | | | 1935ம் ஆண்டு 1ம் மாசம் |
| 1959 | 1 | 35 04 | உட்கட்டு 1க்குத் தட்டு 15 ஓ இ |
| 1991 | 3 | 10 04 | அரக்குடன் பொன் படக்கூர் 1 |
| 2042 | 6 | 15 04 | பெட்டி மோதிரம் 1 |
| 2085 | 9 | 8 | அரைப்பவுண் 1 |
| 2144 | 13 | 8 | மோதிரம் 1 |
| 2155 | 13 | 13 04 | புருசதாலி 1 |
| 2221 | 19 | 50 04 | மணிக் கோர்வை 1க்கு மணி 30 |
| 2222 | 19 | 30 04 | ஆறுபட்டு மணி 1 |
| 2251 | 21 | 6 | தங்கக்காப்பு 1 |
| 2291 | 24 | 16 04 | சாமரத்திப்பூ 1 சிற குச் கொடி 1 |
| 2296 | 25 | 12 | திருகுபூ 1 |
| 2309 | 26 | 7 | இமிற்காதோலை சோடி 1 |
| 2386 | 28 | 12 | இமிற்காதோலை |
| 2354 | 30 | 25 | அறுக்குத்து 20 அரசிலை இல்லை |
| 2362 | 31 | 20 | கைச்சங்கிலி 1 |
| | | | 1935 ம் ஆ 2 ம் மீ |
| 2386 | 2 | 11 | இமிற்கல் கவுத்தோர் 1 |
| 2400 | 3 | 12 28 | இமிற் காதோலை சோடி 1 |
| 2429 | 5 | 7 04 | ஒருகல்பெண்குச்சுசோடி 1 |
| 2438 | 6 | 13 | இமிற்கல்முகப்புசோடி 1 |
| 2441 | 6 | 35 | பி. இ. தாலிக்கொடி 1 |
| 2476 | 9 | 12 | ஒருகல் விறகம்பி தோடு சோடி 1 |
| 2534 | 14 | 38 04 | செல்விக்காப்பு சோடி 1 |
| 2580 | 18 | 95 04 | உட்கட்டு 1க்குதட்டு 23 முழுப்பவுண் 1 ம் அரைப்பவுண் 2 உடன் பொன்பின்னல்கொடி 1 |
| 2623 | 23 | 11 | சிற மோதிரம் 2 |
| 2655 | 26 | 13 04 | ஒருகல் தோடுசோடி 1 |
| 2656 | 26 | 10 | திருகுபூ 1 |
| 2661 | 26 | 18 29 | இமிற்கல் பதக்கம் 1 |
| | | | 3-ம் மாதம் |
| 2709 | 2 | 60 04 | எழுபட்டுமணி 1 |
| 2710 | 2 | 55 04 | இமிற்பத கம்பிப்பூராட்டியல் 1 |
| 2711 | 2 | 100 04 | குண்டுவைத்த வேலைசெய்த 10 டலர் நாணயம் 1 செல்விக்காப்பு சோடி 1 |
| 2717 | 3 | 9 50 | புரோச் 2 |
| 2748 | 5 | 148 04 | இமிற்கல்பென்டனுடன் டைமனட்டியல் 1 அச்சக்காப்பு சோடி 1 சு. இ. இமிற் புரோச் 1 |
| 2778 | 7 | 44 | தங்க அரை ஞாண் 1 கொ. இ. |
| 2789 | 9 | 37 2 | பட்டுக் கைச்சங்கிலி 1 இல்லை |
| 2824 | 13 | 6 04 | இமிற் கல் மோதிரம் 1 |
| 2830 | 13 | 13 04 | கு. வை. வேலைசெய்த அரைப்பவுண் 1 |
| 2831 | 13 | 13 04 | கு. வை. வேலைசெய்த அரைப்பவுண் 1 |
| 2860 | 16 | 7 54 | இமிற்கல் மோதிரம் 1 |
| 2863 | 16 | 15 04 | கூடு 1பழையபதக்கம் 1 |
| 2870 | 17 | 24 04 | இமிற்கல் முகப்பு 2 |
| 2899 | 20 | 15 04 | இமிற் 3கல் குச்சசோடி 1 கைவிலங்கு 1 மு இ பதக்கம் 1 |
| 2927 | 23 | 25 04 | செடிக்காப்பு 1 |
| 2941 | 24 | 7 04 | கைபிடிக் கொக்கி 1 |

விற்பனவு:- 1936-ம் ஆண்டு சாது வருஷம் ஆடிமாசம் 7-ந்திகதிக்குச் சரியான (22-7-36) புதன்கிழமை காலை 8மணிதொடக்கம் எடுபட்டவரை பிற நீக்லாக மிகுதி மேற்படி கடையில் பிசித்த ஏலத்தில் விற்கப்படும்,

வி. பொ. விசுவநாத உடையார்
வெற்றிவேல் மெம்பர்
திரிகோணமலை
3-7-36

Mis 72 6 . 9 . 7 . 36

---

## அரைச்சதச் சண்டை

—

மட்டக்களப்பு, ஜூன். 30

கொச்சிமுனையைச் சேர்ந்த 80 வயதான ஓர் வெற்றிலை வியாபாரி சின்னக் கதிராமத்தம்பி, ஒரு கால் நொண்டியான வேலப்பொடி, சின்னத்தம்பி ஆகிய இருவர் மீதும் "சந்தாவில்" ஒருவரையொருவர் அடித்துக் கொண்டதாக மட்டக்களப்பு போலீசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு இன்று மட்டக்களப்புப் போலீஸ் நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முதலாம் எதிரி கூறியதாவது:- 2ம் எதிரி என்னிடம் வெற்றிலை வாங்கியதில் ½ சதம் எனக்கு கொடுக்கவேண்டியிருந்தது. சம்பவம் நடந்த தினத்தன்று நான் அந்த ½ சதத்தை அவரிடம் கேட்டேன். அவ்வமயம் அவர் என்னைத் தள்ளி விழுத்தி அடித்தார். நான் அவரை அடிக்கவில்லை, விசாரணையின்பின் நீதிபதி இருவரையும் குற்றவாளிகளெனக் கண்டு முதலாம் எதிரிக்கு 10 நாள் சிறைத்தண்டனையும் 2ம் எதிரிக்கு 3 நாள் சிறைத்தண்டனையும் விதித்தார்.

---


## பல்வைத்திய விளம்பரம்

யப்பானிய பல் வைத்தியரான எஸ். இமாய் என்பவர் யாழ்ப்பாணம் பெரியதெருவிலுள்ள திருச்செல்வம் பில்டிங்கில் நிகழும் யூலாய் மாசம் 7ந் திகதி தொடக்கம் 16ந் திகதி வரையில் பல் வைத்தியம் செய்யும் பொருட்டாகத் தங்கியிருப்பர்.

(Mis 70. 6-7-36)


---

## கதிர்காம ஆடித்திருவிழா

வருடாந்த ஆடித்திருவிழா இவ்வருஷம் ஆடி மீ 18ந் திகதி தொடங்கி ஆவணி 3ந் திகதி முடிவுபெறுமென்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இத்திருவிழாவுக்குப் போகும் யாத்திரைப் பிரயாணிகளுக்கு உத்தரவுச் சீட்டு (டிக்கற்) தேவையில்லை.

3. போதிய சாப்பாட்டுச் சாமான்கள் கதிர்காமத்தில் இருக்குமென்பது அசாத்தியம். யாத்திரை போகிறவர்கள் தங்கள் சாப்பாட்டுச் சாமான்களைக் கொண்டு போவது உத்தமம்.

4 1936ம் ஆ வைகாசி மீ 22ந் திகதி "கெசற்" பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்ட விதிகளை யாத்திரை போகிறவர்கள் அனுசரிக்கவேண்டும்.

வதுளைக்கச்சேரி

ஈ. ரீ. மிலிங்ரன்


1936 ம் ஆ ஆனி மீ 27உ.

ஊவாமாகாண அரசாட்சி ஏஜன்று

# ஆஸ்ரின்

## டென்-போர்

**என்னும் காரில் ஓடும் இன்பமே இன்பம்.**



ஆஸ்ரின் ரேன்னிலுள்ள சில சிறந்த குறிப்புக்கள்

அளவு கணக்கான அழகிய கோச்வேர்க். வில்பேஸுக்கிடையில் இருக்கைவசதி. அவசியமற்ற பகுதிகள் ஒன்றும் இல்லை. அவசியமற்ற பாகம் ஒன்றும் இல்லை

**தேக சௌகரியத்திற்கு ஏற்ற சிற்றுகள்**

எளிதில் இயங்குதற்காக, என்ஜின் றப்பரின்மேல் வைக்கப்பட்டிருக்கும்முறை

ஆகமேலுக்கும் மூன்றாவதாகவும் இரண்டாவதாகவும் சிங்கிரமேஷ் அமைக்கப்பட்டு சத்தமில்லாமலும் மிகச் சுலபமாகவும் மாற்றக்கூடிய கியர்.

**ஸ்பெயர் வீல் வைக்கக் கூடிய லக்கேஜ் கரியர்**

என்ஜின்குளிரச் செய்தற்குத் தானாகவே இயங்கக்கூடிய தேர்மோஸ்ற்றின் ஒழுங்கு

ஆ கி ய இ வை க ள ா ம்

**விலை ரூபா 3,185**

மற்றக்கார்களை நீங்கள் விலைகொடுத்து வாங்குகிறீர்கள். ஆனால் ஆஸ்ரின்காரில் செலவிடும் பணமோ பழுதற்ற பணமாகும்.

**உவாக்கர் ஸன்ஸ் அன்கோ, லிமிற்றட் கொழும்பு.**

யாழ்ப்பாணத்திற்கும்,
திருக்கோணமலை, முல்லைத்தீவு, புத்தளம், மன்னார், அநுராதபுரம் ஆதிய இடங்களுக்கும் சோல் ஏஜெண்ட்ஸ்

**வி. செல்வத்துரை & சன்ஸ்**
அதிகாரம் பெற்ற ஏஜன்ஸ்
ஆஸ்பத்திரி ரோட்டு, யாழ்ப்பாணம்.

Y137. 19-8-35. — 18-8-36



# சிவன் வேம்புத் தைலம்

செம்மேகம், கருமேகப் பத்தக்கள், குஷ்டம், குறைநோய், அரிப்பு, கடிப்பு, கிரந்தி, கரப்பான் புண்களும்; விஷ கடிகள் மேகஊறல், கக்கூன்பதங்கள், சொறி சிரங்குகள்; கை கால் வலி, குடைச்சல் பிடிப்புவலி முதலிய குஷ்ட ரோகங்கள்; அண்டவாதம், கண்டமாலை, அரையாப்பு, பௌத்திரம், வெகுப்புற்று ரணங்களும் ஆச்சரியமாய் குணமாகின்றன. ஊறல், பத்து, ரணங்களுக்கு இதை மேலுக்கும் பூசலாம். 12ரான் புட்டி விலை ரூபா 2. 3 புட்டிவரை தபால் செலவு சதம் 75.
திராதெனக் கைவிடப்பட்ட கொடிய ரோகங்களெல்லாம் இதுவரை ஆயிரக் கணக்கில் குணமாகிவிட்டன.

## தாளக பஸ்பம்.

இருமல், இளைப்பு, கஷ்டசுவாசம், க்ஷயம், சுரம், கோழை, உடம்பு அனலா பிருத்தல், ஆகிய சோகைநாசினியும், மூச்சில் சீர்வடிதல், ரத்தம், சிராய் விழுதல், மூக்கடைப்பு, வாயில் நீருலல் இனிப்புத தோன்றல், மசி மந்தம், ஆகிய பீனிசக் கோளாறுகளையும் கண்டிப்பாய்க் குணம்செய்கிறது.

## இருமல், இளைப்பு சுகம்.

என்னைப் பத்து வருஷமாய்த் துன்பப்படுத்திய இரத்தகாசம், கபத்துடன் இரத்தம் விழுதல், தர்காறறு, ஈளைசுவாசம் இருமல் எல்லாம் தங்கள் "தாளக பஸ்பம்" சாப்பிட்டதில் இன்றுடன் 8 நாளில் கடவுள்கிருபையால் நல்ல சுகம்.

(Sd.) அ. செ. செய்யது இப்ராஹிம், திருக்கோணமலை.

தாளக பஸ்பம், அநுபானம், தாளிசபத்திரி சூரணம் உள்பட 20 நாள் மருந்து ரூபா 12-50.

குறிப்பு:—வெளிநாட்டினர்கள் ரூபா 5 அட்வான்ஸ் அனுப்பவும். கேட்லாக்கிரும்

**தண்டபாணி வைத்தியசாலை, பழனி.**

(Q 19. 27-4 to 26-7-36) தி　　(PALNI S. I.)



வெளிவந்துவிட்டது!　　வெளிவந்துவிட்டது!!

## கனிஷ்ட பாடசாலை விடுகைத் தாராதரப்பத்திர வகுப்பு (1937) [J.S.C.] இலக்கியக் குறிப்பு,

இது சென்னைச் சர்வகலாசங்கத்தாரால் 'வித்துவான்' பட்டம் வழங்கப்பெற்றவரும், இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய வண்ணார்பண்ணை, திரு. ந. சுப்பைய பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றது. பதவுரை, கருத்துரை, (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், சொல்லிலக்கணம், சொல்நயம், பொருள் நயம், அணிநயம் முதலியவற்றைவிளக்கும்) குறிப்புரை முதலியன அடங்கியுள்ளது.

1937-ம் ஆண்டு ஆங்கில J. S. C. வகுப்பிற் பயிலும் மாணவருக்கும் ஆவசியகம் வேண்டியது.　　விலை சதம் 80.

**செந்தமிழ் வாசக சிந்தாமணி**

உயர்தர வகுப்புகட்கு உபயோகமானது. அரும்பத விளக்கம் செய்யுள்கட்கு உரை நன்கு எழுதப்பட்டுள்ளன.
விலை சதம் 75.

சண்முகநாதன் புத்தகசாலை அதிபர்கள்.
Mis 12. 13-4-36.) தி　　வண்ணார்பண்ணை.


## கற்பனாசக்தியில்லாத மந்திரி.

1ம் பக்கத் தொடர்ச்சி

சக்தி உண்டு. ஆனால் இது அவரிடம் ஸ்திரமாக நிலைபெற்றிருப்பதில்லை. ஸர். ஸாமுவேல் ஹோரிடத்தில் இந்த அம்சம் பூஜ்யம் தான். பழைய மாமூல்படி நிர்வாகத்தை நடத்துவதில் அவர் சமர்த்தர். எதிர்காலத்தில் வரக்கூடியவைகளைத் தெரிந்துகொள்ளும் திறமை அவரிடம் கிடையாது. எந்தப் பிரச்னையிலும் உள்ள உட்கருத்தை அவர் தெரிந்து கொள்ளமாட்டார். இதற்கெல்லாம் கற்பனா சக்தி வேண்டும். ஸர் ஸாமுவேல் ஹோர் முன்னேற்றப் பாட்டையில் எதிர்காலத்தில் தமது திருஷ்டியைச் செலுத்துவதில்லை. பண்டைச் சம்பிரதாயப்படி உத்தியோகத்துடனும் உண்மையோடும் உழைப்பார். தனியாக எந்தக் காரியத்தையும் செய்யமாட்டார். சாவதானத்தைப் பெரிதாகக் கருதுவார்.

ஆனால் சாவதானத்தைப் பெரிதாகக் கருதுவதினால் அபாயமேற்படக் கூடும். எல்லா விஷயங்களையும் அடிப்படையாகச் சீர்திருத்தவேண்டிய அவசியமும் காலமும் ஏற்படுவதுண்டு. நம்முடைய அன்னியநாட்டுக் கொள்கை இந்த நிலைமையில் இருக்கிறது. நம்முடைய பாதுகாப்புக் கொள்கை இதே நிலைமையில் இருக்கிறது. நம்முடைய சமூக அமைப்பும் இந்த மாறுதலைப் பேர வேண்டி நிற்கிறது.

நாம் துணிவுடன் புதிய பரீட்சார்த்த வழிகளில் இறங்கவேண்டும். ஆனால் ஸர் ஸாமுவேல் ஹோர் இதைச் சற்றே செய்து கொள்ளவும் திறமையற்றவர். பழைய ராஜபாட்டைதான் அவருக்கும் பிடிக்கும். அவருடைய வாழ்க்கை வழியில் இதுவரை "காடு முரடு" எதிர்ப்பட்டதில்லை. ஆகவே உலகம் முழுவதும் சுலபமாகச் சென்றுகொண்டிருப்பதாக அவர் நினைக்கிறார். புதிய வழிகளை மேற்கொள்ளவேண்டுமென்பதை அவரால் எண்ணவும் கூடவில்லை.

ஸர் ஸாமுவேல் ஹோர் நிர்வாகத் திறமையுள்ளவர். நேர்மையான நடத்தையுள்ளவர். ஆனால் இந்த நெருக்கடியான காலத்திற்கு இந்தக் குணங்கள் பயனற்றவை. அவர் அன்னிய நாட்டு மந்திரியாக இருக்கும்போது இந்தியாவில் ஓர் புது யுகம் பிறந்துவிட்டதென்பதை ஒரு சிறிதும் அவர் உணராதது ஆச்சரியமே. இந்தியப் பிரச்னையில் மிகவும் பிற்போக்கான முறையையே அவர் அநுசரித்தார். இந்திய மசோதா தம்முடைய பிரதானமான நிருவாகவேலையென்று அவர் கருதுகிறார். இதற்கு நாம் ஒரு காலத்தில் இரட்டிப்பாக ஈடுசெய்ய வேண்டி ஏற்படும்.

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஸர் ஸாமுவேல் ஹோரின் உதவி இன்றியமையாததென்று திரு பால்ட்வின் எண்ணிவிட்டார். பிரிட்டிஷ் பொதுஜன அபிப்பிராயத்தை அவர் அற்பமாக மதித்துவிட்டார். பிரதம மந்திரியின் சமீபகால நியமனங்கள் யாவும் இந்தப்போக்கிலேதான் இருக்கிறது. மிஸ்டர். ஈடன் போன்ற இளைஞர்களும் மந்திரிசபையில் ஸ்தானம் பெற்றவுடன் விற்பனவர்களாய் விடுகிறார்கள். சென்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு அரசாங்கம் எடுத்த காரியங்கள் யாவும் அலங்கோலமாகவே முடிந்திருக்கின்றன. அபிசீனியப் பிரச்னை டாலஸ் நிலைக்கும் ஏகாதிபத்தியப் பாதுகாப்பு கல்வி மசோதா நிலக்கரிமசோதா இன்னும் மற்றும் பலவும் ஊழலாகவே செய்யப்பட்டிருக்கின்றன.

இப்பொழுது ஒரு காலிஸ்தானத்திற்கு ஒரு பழைய மனிதர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அளவிடற்கரிய தவறு செய்த மனிதர் சொந்தக்காரர்களாலும் கைவிடப்பட்ட மனிதர் மறுபடியும் பீடத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இதிலிருந்து இந்த அரசாங்கம் ஜீவனற்று விட்டது என்பதை அபேட்சகர்கள் உணரவேண்டும். இன்னும் மூன்று வருஷம் இந்த அரசாங்கம் நீடித்தால் உலகத்திற்கே பேராபத்தாக முடியும். இப்பொழுதுதான் நாம் முனைனிலும் பதின்மடங்கு ஊக்கமாக வேலைசெய்து இந்த ஜீவனற்ற அரசாங்கத்தின் தகுதியின்மையை யாவரும் உணருமாறு செய்யவேண்டும். இதன் மூலமாகத்தான் நம்முடைய கொள்கையை நிலை நிறுத்துவது சாத்தியமாகும்.

# சைவ பரிபாலன சபை.

## 1910-ம் ஆண்டில் நிகழ்ந்தவை.

(29 - 6 - 36) ன் தொடர்)

இந்துக் கல்லூரிக் கனிஷ்ட வித்தியாசாலைக்கென ஒரு கட்டடம் அமைக்கப்பெறாமையால் வாடகைத்துக்கு வாங்கிய கட்டடங்களிலேயே பல வருஷ காலம் நடைபெற்றுவந்தது அது வசதிப்படாமையால் விடுதிச்சாலையே நடவாதிருந்தது. பின் கல்லூரி நிலத்தில் அதற்கென ஒரு கட்டடம் அமைத்து அக்கட்டடத்தில் 1910 ஆ. வைகாசிமீ 30உ முதல் விடுதிச்சாலை நடைபெற்றுவருகின்றது.

காரைதீவிலே இருந்த இலக்ஷ்மணபிள்ளை என்பவர் 1888ம் ஆண்டில் அங்கே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வித்தியாசாலை என்னும் பெயரோடு ஒரு பள்ளிக்கூடம் தாபித்து நடத்திவந்தார்.

"This school was started about 20 years ago by Mr. M. Sayampu in the island of Karaitivoe to impart English and vernacular education on Hindu lines. Till May 1910 he was managing it with great difficulty caused by want of liberal pecuniary help. But a few months ago some of the old students of the school who are now employed in the Federated Malay States formed a Union, and have promised to help their alma mater by contributing a sum sufficient for the maintenance of the Headmaster. In the best interests of the institution Mr. Sayampu came to the opinion that the management of this educational institution should not rest in the hands of one person alone; and accordingly vested its management in the hands of the Board of Directors of the Jaffna Hindu College on the 26th of May 1910, making it a feeder school to the Hindu College."

தென் இந்தியாவிலே மூன்று வருஷகாலம் உபாத்தியாயராயிருந்து அநுபவம்படைத்த திருச்சிராப்பள்ளி ஜில்லா இடையாற்றுமங்கலம் நிருஸ்ணசுவாமி ஐயர் குமாரர் சிவசுப்பிரமணிய ஐயர் B. A. 1910 ஆ. ஆடிமீ இவ்வித்தியாசாலையின் பிரதமாசிரியராக நியமிக்கப்பெற்று மங்களத்தோடும் இங்குவந்து கடமை பார்த்துவந்தார்.

### பழைய மாணவர் கூட்டம்

இந்துக்கல்லூரிப் பழைய மாணவரின் கூட்டம் 1910 ஆ. ஆடிமீ 16உ பிரதமாசிரியர் G. சிவராவு தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் இம்மாணவர் சங்கத்தை நடத்துவதற்கு வேண்டிய விதானங்கள் வாசிக்கப்பட்டு அங்கீகாரமானபின் அடுத்த வருஷத்துக்கு G. சிவராவு தலைவராகவும், C. K. சுவாமிநாதனும் சி. கந்தையாவும் உபதலைவர்களாகவும், கா. அருளம்பலம் காரியதரிசியாகவும், த. சரவணமுத்து உப காரியதரிசியாகவும் சி. கந்தையாபிள்ளை தனாதிகாரியாகவும், நியமிக்கப்பெற்றார்கள். இதன்பின் கல்லூரிப்பழைய மாணவரின் நாமங்களும் வேறு முக்கிய குறிப்புகளும் அடங்கிய ஓர் Calendarம் Magazineம் அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டுமென்று தீர்மானமாயிற்று. இத்தீர்மானப்படி Calendar இந்த வருஷத்திலச்சிடப்பெற்றது.

### ஆறாவது வருஷாந்தக் கூட்டம்

இந்துக்கல்லூரி அதிகாரசபையாரின் ஆறாவது வருஷாந்தக் கூட்டம் 1910 ஆ. புரட்டாதிமீ 3உ கூடிற்று. முந்திய வருஷத்து உத்தியோகத்தர்களும் நிருவாகசபை அங்கத்தவர்களுமே இவ்வருஷத்துக்கும் உத்தியோகத்தர்களும் நிருவாகசபை அங்கத்தவர்களுமாகத் தெரிவு செய்யப்பெற்றார்கள்.

### வரவு செலவு

1909 ஆ. ஆடிமீ 1உ முதல் 1910 ஆ. மாசிமீ முடிய வந்த மாணவர் சம்பள வரவு ரூ. 3493 சதம் 62ம், அரசினர் உதவி நன்கொடைப் பணம் ரூ. 3145 சதம் 45ம், சைவ நன்மக்கள் பலர் உதவிய நன்கொடையால் ரூ. 7571 சதம் 35ம் பல சில்லறையால் ரூ. 107 சதம் 75ம் ஆக ரூ. 14318 சதம் 17 ஆனது இக்காலத்தில் உபாத்தியாயர்கள் வேதனம் ரூ. 5417 சதம் 70ம், கல்லூரிக்கட்டடத்தில் ரூ. 4586 சதம் 68ம் பல சில்லறையாய் ரூ. 218 சதம் 66 ஆனது. இக்காலத்தில் இங்கே கற்ற மாணவர் தொகை 621 கற்பித்த உபாத்தியாயர்கள் தொகை 21.

### Victoria Reading Hall

"A Special General Meeting of the Victoria Reading Hall was held in the Hindu College Hall on Thursday 1st September 1910. Present Messrs. A. Sapapathy, S. Thambiahpillai, P. Karthigesa Pillai, C. K. Swaminather, V. M. Muttucoomaru, T. Arumugam, and S. Sivagurunathar.

Mr. A. Sapapathy was voted to the Chair.

I. In view of the fact that the Committee finds it difficult to manage the Victoria Reading Hall as its income is not adequate for its maintenance, it is resolved to transfer the management to the Faculty of the Hindu College who have undertaken to manage it on the following conditions: (1) It shall continue to be called the Victoria Reading Hall (2) That all respectable residents of Jaffna shall be eligible for admission as member to the institution as hereto for subject to such rulers as the Faculty may frame.

Mr. G. Shiva Rau, Principal Hindu College, who was present gave his consent to the above terms on behalf of the faculty.

A. Sapapathy
Chairman,
S. Sivagurunathar
Hony. Secretary."

### XII பரிசளிப்பு

இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு 1910 ஆ. புரட்டாதிமீ 17உ பொ. இராமநாதன் தலைமையில் பரிசளிக்கப்பட்டது. அன்றும், இச்சபைத் தனாதிகாரி பசுபதிச் செட்டியாராலே இக்கல்லூரிக்களிக்களிக்கப்பட்ட கிட்டங்கியின் வாடகைப் பணத்துக்கு வாங்கிய புத்தகங்களும் பரிசுகளாக உதவலாயின. தலைவர் தமது குறிப்புரையில் இக்கல்லூரியைத்தாபிப்பதற்கு அத்துவக்காத்து நாகலிங்கம் பசுபதிச் செட்டியார் முதலானவர்கள் பட்ட கஷ்டங்களெல்லாம் தமக்குத் தெரியும் என்பனவாகவும் கூறினார். ராவ் பகதூர் L. C. உவில்லியம்ஸ் குறிப்புரைகூறியபோது "..........It was an Institution that all should be proud of,as, being a national institution maintained by the Jaffnese. It owed its existence and stability among others to his friends Messrs. Nagalingam and Pasupathy Chettiar, who he was sorry were so early cut off................" என்று சொல்லியுள்ளார்,

### மிருகபலியிடுதலைத் தடுத்தமை

இந்நாள் சைவாலயங்கள் சிலவற்றிலே சில உற்சவகாலத்திலே ஆடு கோழி முதலிய மிருகங்களை வெட்டிப் பலியிட்டுவந்தார்கள். இதைக்கண்ட இச்சபையார் 1910ம் ஆண்டிலே பிரசங்கவாயிலாகவும் துண்டுப்பத்திரிகைகள் வாயிலாகவும் அது செய்வது பாவம் என்பதைப் பல நூற் பிரமாணத்தாற் காட்டித் தடுக்கப் பெருமுயற்சி செய்தார்கள்.

(தொடரும்)

# இலங்கையில் நெய்யப்பெற்ற சீலைகள்

## வெள்ளவத்தை மில்லில் தயாரிக்கப்பட்டவை

ஒவ்வொருவீட்டிலும் நன்கு அறியப்பட்டவை என்பது எல்லோருக்குந் தெரிந்த விஷயம்

இவை நன்றாக உடைதாங்கக்கூடியவை; பார்வைக்கு மிக அழகானவை; மிக மலிவானவை;

உங்கள் வியாபாரிகளிடம் **இச்சீலைகளையே** தருப்படி வற்புறுத்துங்கள்!

உத்தரவாதம்பெற்ற அழியாத நிறமுள்ள நமது பட்டுக்கரைச் சேலைகள் வேற்று நாடுகளிலிருந்து இங்கு சேலைகளை இறக்குமதி செய்விக்கும் எவருக்கும் பொறுமையை விளைப்பனவாகும்.

உத்தரவாதம் பெற்ற அழியாத நிறமுள்ள நமது பட்டுக்கரை வேட்டிகளும் சால்வைகளும் அவற்றை உபயோகிப்போருக்குப் பெருமையை அளிப்பனவாகும்.

**சில்லறைவியாபாரக்கடை,** பெரியகடை, யாழ்ப்பாணம்

தி சிலோன் ஸ்பின்னிங் அன்வீவிங் கம்பெனி லிமிடெட்டின்

முதலாவது மோர்ட்கேஜ்டிபெஞ்சர்கள் வைத்திருப்போருக்கு டிரஸ்டிகள்



# Nethrananda Thailaya

**Ceylon's Premier Curative Medicine Oil.**

## நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.

தபாற்கூலி 45 சதம்.



இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை இக்ஷணமே நிவர்த்திசெய்யும் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகிதால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளிவந்திருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்,

மனிதர் முக்கியமாகத் தெரிந்துசொல்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும் இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று ஊர்ந்தறிகிற ஒவ்வொரு சிறபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இள நரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினுல் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—
வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—
பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காஸில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.
(H 332, 20-3-36 to 19-9-36)



## "NEW ERA SERIES"

OF

**School Text Books**

பாடசாலைகளுக்குரிய புதிய தமிழ் நூல்கள்

செந்தமிழ்க் கருவூலம் (1—3)

கதாவாசகம்

முதலியன.

அரசினர்
துவிபாஷா ஆசிரியர்
திரு. மா. பீதாம்பரன் அவர்கள்
Hd. Master (Ag.)
R. S. School,
Sainthamaruthu.

இயற்றியவை.

விரைவில் வெளிவரும்.

(Q. 22. 1-5-36—31-7-36). (ஜ)


## விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பத்தி (கலம்) | ரூபா | 10-00 |
| ½ | ,, ,, | ,, | 5-50 |
| ¼ | ,, ,, | ,, | 3-00 |
| 1 | அங்குலம் | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்பட மாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை


## லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்

பாரதநாட்டின்

முதன்மையானதும் சிறந்ததுமான

திவ்விய ஔஷதம்.

மிருகக் கொழுப்பு

கலக்கப்படவில்லை என்பதற்கு

உத்தரவாதம்.

Y 44 1-1—31-12-36)


படுபயன் வெஃகிப் பழிப்படுவசெய்யார்
நடுவன்மை நாணுபவர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna on Monday, July 6th 1936.